# கிளிநொச்சியில் 'வள்ளுவர் கோட்டம்

பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 30 பங்குனி 21 ரபி அவ் 24 இதழ் 52
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3-4-78

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலா தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## 30 ஏக்கரில்

(கொழும்பு)

தமிழ்நாட்டில் உள்ளதைப் போன்று கிளிநொச்சியில் ''வள்ளுவர் கோட்டம்'' ஒன்று அமைக்கப்பட உள்ளது.

தெய்வத் தமிழ் திருக்குறளைப் பரப்பும் நோக்குடன் அமைக்கப்படவுள்ள இக்கோட்டத்திற்கு கிளிநொச்சியில் அரசிடமிருந்து 30 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

இந்தியாவிலுள்ள ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதன் பல்கலைக்கழகம்போன்று செயற்படும் இக்கோட்டம் அறைகள் பராமரிப்பு, அதிகள்

(5ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

# முதன்மைபெற்று விளங்கும்

## சேர் இராமநாதன் கனவு இருவருடங்களில் நனவாகும்

### யாழ். வளாகத்தலைவர் பேராசிரியர் 'வித்தி' அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**''இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம், அடுத்தமாதத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறவிருக்கிறது. சகலதுறைகளையும் கொண்ட பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகமாக, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் துவங்கி; சேர் பொன். இராமநாதன் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவியபொழுது கண்டகனவை நிறைவேற்றி வைக்கும் என்பது உறுதி''.**

இவ்வாறு யாழ்ப்பாணவளாகத் தலைவர் கலாநிதி சு.வித்தியானந்தன் நேற்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த சேர் பொன். இராமநாதன் நினைவு தினம் நூல் வெளியீட்டு வைபவத்தில்பேசுகையில் தெரிவித்தார்.

இராமநாதன் அறங்காவல் குழுவின் தலைவரான திரு எஸ் ஆர் கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் பரமேஸ்வராக் கல்லூரியை ஆரம்பித்த நோக்கம்பற்றியும் அவரது அரசியல், கல்வி, சமய சட்டத்துறை பற்றியும் சேர் பொன் இராமநாதனது வாழ்க்கை வரலாற்றை எழுதிய நூலாசிரியர் திரு. மு. வைத்திலிங்கத்தின் எழுத்தை மேற்கோள் காட்டினார்.

இவர் யாழ்ப்பாணத்திற்கு தனித்துவமான பல்கலைக்கழகம் தேவையில்லையென்றும் பேராதனையுடனே, கொழும்புடனோ கீழ்ப்படிந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக இருந்தால் போதும் என்று கூறிவருகின்றனரென்றும் ஆனல் இன்னும் இரண்டு வருடங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே இலங்கையின் முதன்மை வாய்ந்த பல்கலைக்கழகமாக மிளிருமென்றும் பேராசிரியர் வித்தியானந்தன் கூறினர்.

## இளம் சந்ததியினர்

### அவசியம் அறியவேண்டும்'

—எம். சி. சன்சோனி

"சேர் பொன்னம்பலம் இராமநாதனது வாழ்க்கை வரலாற்றை நிச்சயமாக இன்றைய இளம் சந்ததியினர் படித்து அறிய வேண்டும். அப்போது தான் அப்பெருமானது சிந்தனையை, நல்லறிவை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்" என்று நேற்று மாலை நடைபெற்ற சேர் பொன்னம்பலம் இராமநாதனது நினைவு நாள் நூல் வெளியீட்டு விழாவில், முன்னைநாள் முதன்மை நீதியரசர் திரு. எம். சி சன்சோனி பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் திரு. என். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்றது திரு எம். சி. சன்சோனி தொடர்ந்து பேசுகையில்,

"சேர் பொன்னம்பலம் இந்நாட்டின் தேசிய விடுதலைக்கு பாடுபட்ட ஒரு சிறந்த அறிஞர். அன்னாரது சட்டவாதம், மேல்நாட்டவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் அமைந்திருந்தது. அன்னார் அரசியல், ஆத்மீக, சமயதுறையிலும் பெரும் தொண்டாற்றியுள்ளார்" என்றார்

யாழ். மேல் நீதிமன்ற நீதியரசர், ஜனாப் எம். எம். அப்துல்காதர் பேசுகையில், 'இந்நூல் மிகச் சிறந்த முறையில் நூலாசிரியர் ஆக்கித் தந்தாலும் இதன்விலை மிகக்கூடுதலாகவுள்ளது. பணம் படைத்தவர்களுக்கு இதுசுலபமாகத் தெரிந்தாலும், வரலாற்றை அறிந்து கொள்ளும் மாணவர்கள் இதை வாங்கிப் படிப்பது கஷ்டமாகவிருக்கும். குறைந்த செலவில் இந்நூல் வெளியிடப்படவேண்டும் சுமாரான விலையில் 20 ரூபாய்க்கு மாணவர்களுக்கு விற்கப்படவேண்

[8ம் பக்கம் பார்க்க]

## கலைஞருக்கு

### எதிராக கறுப்புக்கொடி

### மதுரையில் 500 பேர் கைது

மதுரை, மார்ச் 2

கலைஞர் மு. கருணாநிதியின் மதுரை விஜயத்தை எதிர்த்து கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சித்த இந்திராகாந்தி காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஐநூறுபேர் இன்று காலை கைதுசெய்யப்பட்டனர்!

கைதுசெய்யப்பட்டவர்களில் இந்திராகாங்கிரசின் [தமிழ்நாடு] முக்கிய பிரமுகர் திரு. ப நெடுமாறனும் ஒருவராகும்;

தமிழ்நாடு சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவரான திரு. மு. கருணாநிதி, இன்று மதுரைக்கு விஜயம் செய்யவிருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பிய இந்திராகாந்தி காங்கிரஸ் ஆதரவாளர்கள் சுமார் 500 பேர் திரு ப. நெடுமாறன் தலைமையில் சித்திரை வீதியில் பொலிசாரின் தடைஉத்தரவையும் மீறி, தி. மு கழகத்துக்கும், கலைஞர் கருணாநிதிக்கும் எதிராக கோஷமெழுப்பிக்கொண்டு ஊர்வலமாக வந்துகொண்டிருந்தனர்.

திரு. மு. கருணாநிதி மதுரைக்கு வந்ததும் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்த இவர்கள் திட்டமிட்டிருந்தனர்

நிலைமை இவ்வாறுக இருந்தபோதிலும், கலைஞர் கருணாநிதி வருவதற்கு முன்னதாகவே ஐநூறு பேரும் சித்திரை வீதியில் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டனர்!

## வீட்டுக்கு ஒரு ரூபாய் நிதி

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவாலயத்துக்கான 'வீட்டுக்கு ஒரு ரூபா நிதி' பெருவெற்றியளித்துள்ளது.

தொகுதிகள் தோறும் கூட்டணிப் பிரமுகர்களால் சேகரிக்கப்பட்டுவரும் நிதி பலஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தாண்டி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உத்தேச இலக்கான இரண்டு லட்சம் ரூபாவை தந்தை மறைந்த ஓராண்டு நிறைவு தினத்துக்குமுன் திரட்ட முடியுமென்று செல்வா அறங்காவல் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தொகுதிகள் தோறும் நூறு உண்டியல்கள் மூலம் நிதிதிரட்டப்பட்டு வருகின்றது. (ஈ)

## "நமது திரைப்படங்களில்

### கலாச்சாரம் பிரதிபலிக்கவேண்டும்''

—பிரதமர்

(வெள்ளவத்தை)

''இலங்கை திரைப்படத் துறையின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் செயல்படும். சர்வதேச பரிசில்களைப் பெறும் அளவிற்கு இலங்கை சினிமாத்துறை இப்போது வளர்ச்சி பெற்றுள்ளது''

இவ்வாறு 1977ல் சிங்கள சினிமாத்துறையில் பரிசுபெற்றவர்களுக்கான வைபவத்தில் பிரதமர் திரு ஆர் பிரேமதாசா குறிப்பிட்டார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு விசேட அழைப்பாளர்களாக பிரதமர் திரு ஆர் பிரேமதாசா கலந்து கொண்டார். தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளர் திரு [illegible] அமுனம குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர்.

திரு ஆர் பிரேமதாசா தொடர்ந்து பேசுகையில்;

''இலங்கை திரைப்படத் துறையின் வளர்ச்சிக்காகவே அரச திரைப்படக்கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டது. தேசிய திரைப்படங்களின் வளர்ச்சிக்கு அரசு போதிய ஒத்துழைப்பு நல்கும்

வெளிநாட்டு திரைப்படங்களின் இறக்குமதியால் உள்ளூர்த்திரைப்படங்கள் பாதிப்படையக்கூடாது பிறநாட்டு கலை, கலாச்சாரங்கள், பண்பாடுகளை தெரிந்துகொள்வதற்கே திரைப்படங்கள் இறக்

(8ம்பக்கம் பார்க்க

# யாழ். வளாக சிங்கள மாணவர் பட்டினி போடப்பட்டதாக

## எஸ். பி. லியனகே சொன்னார்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையைச் சேர்ந்த டாக்டர் ராஜசிங்கம் தெய்வேந்திரம் சன்சோனிக் கமிஷன் முன் கூறியதாவது:

"நான் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றினேன். எனக்கு 3 குழந்தைகள் உண்டு. நாங்கள் விடுதியில் தங்கியிருந்தோம். என் கடைசிக்குழந்தை ஆகஸ்ட் 3ம் தேதி அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் பிறந்தது. என் மனைவி 12-ம் திகதிவரை வார்ட்டில் இருந்தார். மனைவியும் ஆஸ்பத்திரியில் வேலைபார்த்தார்.

ஆகஸ்ட் 16ம்தேதி விவேகானந்தா மகாவித்தியாலயத்திலிருந்து நான் திரும்பிவரும் போது யாழ்ப்பாணத்தில் கலவரம் நடந்ததாகவும் அனுராதபுரத்திலிருந்து பொலிசார் சென்றிருப்பதாகவும் அறிந்தேன். ஆஸ்பத்திரி பகுதியில் எல்லாம் வழக்கம் போல் இருந்தது. நாங்கள் அன்றிரவு 10 மணிக்குப் படுத்தோம். ஆகஸ்ட் 16ம் தேதி நள்ளிரவு விடுதிக் கதவில் தட்டிச் சத்தம் கேட்டது. வந்தவர்கள் பயமடைந்திருந்தார்கள். தாங்கள் இரவு மெயிலில் வந்ததாகவும் தாக்கப்பட்டதாகவும் சொன்னார்கள். இதன் பின் படுக்க முடியவில்லை. காலையில் பல இளைஞர்கள் பஜார்ப் பக்கம் நடமாடுவதைக் கண்டேன் நான் சுகாதாரசேவை அத்தியட்சகர் கந்தோருக்கு சென்றேன். என்மக்களைப் பள்ளிக்கு அனுப்பவில்லை. காலை 8 மணிக்கு மக்கள் சாமான்கள் கொண்டு செல்வதைக் கண்டேன். ஆஸ்பத்திரிக்கிளாக்கர் வந்து தமிழ்க் கடைகள் தாக்கப் பட்டுள்ளதாகவும் என்னை ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டாமென்றும் சொன்னார். அன்று சுகாதார அத்தியட்சகர் லீவில் சென்றிருந்ததால் நான் டாக்டர் அபயசிறி குணவர்த்தனவிடம் போய் நிலைமையைச் சொன்னேன். என்னை விடுதிக்குப் போகுமாறும், தான் வைத்திய அத்தியட்சருடன் சென்று ஏ எஸ். பி யைச் சந்திப்பதாகவும் கூறினார். பின்பு அவர்கள் திரும்பி என் விடுதிக்கு வந்தனர். ஏ. எஸ். பி. பொலிஸ் பாதுகாப்பு அளிப்பதாக உறுதி அளித்திருப்பதாக சொன்னார்கள். ஆஸ்பத்திரிக்கும் விடுதிக்கும் பாதுகாப்புகிடைக்குமென்றும் பயப்படவேண்டாமென்றும் சொன்னார்கள்.

அனுராதபுரம் வைத்திய அதிகாரி டாக்டர் செல்வராசா வந்து தன் குடும்பத்தை அனுப்ப ரயில்நிலையம் சென்ற போது ஒரு குண்டர் கூட்டத்திலிருந்து தப்பி விட்டதாகவும், ரயில் நிலைய அதிபரின் கார் எரிக்கப்பட்டதாவும் கூறினார் 11-30 மணிக்கு வைத்திய அதிகாரியின் விடுதி தாக்கப்பட்ட தகவல்வந்தது அன்று 3 மணிக்கு நிலைமை மோசமானது. விடுதியில் இருந்த பெண்களும் குழந்தைகளும், அழத்தொடங்கினர். வைத்திய அதிகாரி உதவி பொலிஸ் அதிபருக்கு பல தடவை போன் செய்து நிலைமையை கூறினார்.

யாழ்வளாக சிங்கள மாணவர்களைப் பட்டினி போட்டதாக பொலிஸ் அதிபர் சொன்னார். அப்போது அனுராதபுரம் பொலிஸ் அதிபர் லியனகே அங்கு வந்தார். வைத்திய அதிகாரியுடன் கதைத்தார். நாங்கள் சுற்றி நின்றோம் தான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்துள்ளதாகவும் அங்கு மக்கள் பொலிசாரைச் சுடுவதாகவும் அவர் கூறினார்.

மார்க்கட்டும் கடைகளும் எரிக்கப்பட்டுவிட்டதாகவும், யாழ் வளாகத்திலுள்ள சிங்கள மாணவர்கள் வளாக மேல் மாடியில் 3 நாள் பட்டினி போடப்பட்டிருப்பதாகவும் கூறினார். நாங்கள் இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டர்கள், சிங்களம் பொலிசாருக்குச் சிகிச்சையளிக்க மறுத்துவிட்டார்கள்; அதனால்தான் அந்தக் கான்ஸ்டபிளை இங்கு அனுப்பிவைத்தேன் என்று வைத்திய அதிகாரியிடம் அவர் கூறினார். யாழ்ப்பாணத்திலுள்ள டாக்டர்களுக்கு, வைத்தியக் கோட்பாடுகளே தெரியாது என்றார். மறுநாள் 9 மணிக்கு இராணுவம் வந்தது. வைத்திய அதிகாரி விசேஷ ரயில் ஒழுங்கு செய்வதாகக் கூறினார். பின்பு அந்த ஏற்பாடு செய்யப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வளாக மாணவர்களைக் கொண்டுவரும் பஸ்ஸில் எங்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் எனக் கூறப்பட்டது. கச்சேரிக்குப் புறப்பட்டோம்.

### வைத்திய அதிகாரியை பயமுறுத்தினார் ஒருவர்

வைத்திய அதிகாரியும், டாக்டர் அபய சிறிவர்த்தனவும், மற்றும் சிங்கள நண்பர்களும் எங்களை வழியனுப்பும் போது, அங்கு நின்ற ஒருவர், டாக்டர் அபய சிறி குணவர்த்தனவைப் பார்த்து 'இன்று அவர்களுக்கு நடந்தது. நாளை உதவி செய்த உங்களுக்கு நடக்கும்' என்றார்,

நாங்கள் கச்சேரிக்கு வந்து சேர்ந்தோம். கச்சேரியில் தண்ணீர் வசதி எதுவுமே இல்லை. போர்க்களமாகக் காணப்பட்டது.

18ம் தேதி யாழ்ப்பாண வளாகத்திலிருந்து சிங்கள மாணவர்கள் வந்திருந்தனர். ஒரு மாணவர் வந்து என்ன வேண்டும் எனக் கேட்டார்; பாணும் தண்ணீரும் வேண்டும் என்றேன். நாங்கள் உங்களின் 'ஆட்களைப் போன்றவர்களுக்கு, உங்களுக்கு சும்மாவே வாங்கித்தருவோம் என்று கூறிச் சென்றார். திரும்பிவரவில்லை வளாக மாணவர்களைக் கொண்டுவந்த பஸ் கச்சேரிக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்தது. மாணவர்கள் எங்களைப் பார்த்து கதைத்துக்கொண்டிருந்தனர். பின் அங்கிருந்து வவனியாவந்து யாழ்ப்பாணம் வந்தோம்.

சட்டத்தரணி எஸ். கோடீஸ்வரனின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அனுராதபுரத்தில் கடமையாற்றிய எல்லா டாக்டர்களும், இடமாற்றத்திற்கு விண்ணப்பித்ததாகக் கூறினார்.

இடமாற்ற முதல் பட்டியலில், அனுராதபுரத்திலிருந்து களுத்துறை, மாத்தறை, நக்குவாலைக்கு டாக்டர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்கள் என்றும் கூறினார்.

### யாழ்ப்பாணம் கேட்க களுத்துறைக்கு மாற்றினராம்

சட்: யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் கேட்க, யாழ்ப்பாணத்திலிருந்து மிகத் தூரமான இடங்களுக்கு இடமாற்றம் கிடைத்தது? ஆம். இது பற்றிப் பின்னர் மேலிடத்திற்குப் புகார் செய்ததைத் தொடர்ந்து களுத்துறைக்கு மாற்றப்பட்டவர்கள் மாத்தறைக்கும், மாத்தறைக்கு மாற்றப்பட்டவர்கள் களுத்துறைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். (க-அ)

---


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முத்துஐயன் கட்டு வலது கரையில் கிணறு, தென்னை, மா ஆகியவற்றுடன் குளத்து தண்ணீர் உடைய பஸ் போகும் பாதையில் அமைந்த காணி விற்பனைக்குண்டு. எஸ். வேலும்மயிலும் (பெயின்ரர்) ஊறணி, வல்வெட்டித்துறை. 8916

நாவற்குளியில் கண்டிவீதிக்குச் சமீபத்தில் தொழிற்சாலை அல்லது வீடுகள் கட்ட அல்லது தென்னந் தோட்டத்திற்கு உகந்த சுமார் பத்து ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அரஸ்கோ இன்டஸ்ட்ரீஸ், 163, கண்டிவீதி, யாழ்ப்பாணம் 8932

### தேவை

வீடு அல்லது பகுதி வீடு சுண்டிக்குளி சின்னக்கடைப் பகுதியில் உடன் தேவை. விளம்பரதாரர் இல. 74 பாங்சால் வீதி, யாழ்ப்பாணம் 8941

### கல்வி

தனிப்பட்ட முறையாகவோ அல்லது வீடுகள் சென்று ஆங்கில இலக்கண. இலக்கியம் (Emma Mc Beth) பேச்சு Spoken English கற்றுக் கொடுக்கப்படும். விளம்பர இல 8920 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 8920

### சுன்னாகம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

### முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 8000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன. கேள்விப் பத்திரங்களை ரூபா 250/- மீளளிப்பு வைப்புப்பணமாகச் செலுத்தி காரியாலயவேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 7-4-78 நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்
பல. நோ. கூ. சங்கம்,
1-4-78. 8942


## பதவி உயர்வுடன் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் கடந்த மூன்று வருடங்களாகக் கோவை உடைப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. எஸ். அருணகிரிநாதன் முதலாம்தர தபால் அதிபராகப் பதவி உயர்வுபெற்று காத்தான்குடி தபால் அதிபராக இம் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. அருணகிரிநாதன் கடந்த இரண்டு வருடங்களாக அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்க யாழ். கிளையின் செயலாளராகவும் தபால் திணைக்களத்தின் 321 வது கடன் சபையின் முகாமைக்குழு உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணம் தபால் நிலைய பிரதம அதிபர் திரு எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பலர் இவரது சேவைத்திறனைப் பாராட்டிப் பேசினர். (அ)


## கோட்டு விற்பனவு திருத்தம்

வழக்கு இல ஈடு/75 யாழ். மாவட்ட நீதிமன்றம் 21-3-78-ந் திகதியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி விற்பனை விளம்பரத்தில் விற்பனவு திகதியை 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 18-ம் திகதி வியாழக்கிழமை என திருத்தி வாசிக்கவும்.

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.
8936

## பிறந்ததின வாழ்த்து

### சி. ஞானசேகரன்

தமிழ்நாடு திருமக்கோட்டை சிவசுப்பிரமணியன் திலகரத்தினேஸ்வரி தம்பதியரின் புதல்வன் ஞானசேகரன் தனது முதலாண்டு நிறைவை மார்ச் மாதம் 24ம் திகதி கொண்டாடினார் அவரை அப்பா, அம்மா, பாட்டிமார், தாத்தாமார், சித்தப்பாமார், மாமாமார் இலங்கை தொல்புரம் சுழிபுரத்திலுள்ள தாத்தா எஸ். எம் எஸ். முத்துக்குமாரசாமிக்குருக்கள், மாமா, பாட்டி ஆகியோர் வாழ்த்துகிறார்கள். 8943

# WANTED

## ACCOUNTS CLERK CUM STENOGRAPHER

A vacancy exists in a reputed Establishment in Jaffna, for an Accounts Clerk with a good knowledge of English Stenography. Knowledge of Tamil type-writing will be considered an added advantage.

Apply in own hand-writing before 14-4-78, to Advt. No. 100, P O. Box 49, Jaffna,

விற்பனையாகின்றது !

- இரண்டே வாரங்களில் துரிதமாக மீட்டல் செய்யலாம் !
- இலகுவான தமிழ்நடையில் வெளிவரும் முதல் நூல் !

G. C. E. (A/L) மாணவர்களுக்குரிய

## அளவையியற் சுருக்கம்

பகுதி I
ஆக்கியவர்
சுண்டிக்குளி
எஸ். எஸ். மனோகரன்
வெளியீடு :
பிறைற்சென்ரர், B. M. C. லேன், யாழ்ப்பாணம்.
கிடைக்குமிடம் :
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
8937


## சிறந்த நடத்துநர் தெரிவு: முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டறிக் கழகம் நடாத்தும், சிறந்த நடத்துநர் தெரிவுப்போட்டியின் விண்ணப்ப முடிவு திகதி வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாதம் 14ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில், யாழ். டிப்போவிலிருந்து செயற்படும் பஸ்வாகனங்களில் கடமையாற்றும் சிறந்த நடத்துநர்களை தெரிவுசெய்யும் பொறுப்பு பொது மக்களிடம் விடப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்ப படிவம் தினமும் "ஈழநாடு" பத்திரிகையில் பிரசுரமாகிவருகின்றது.

போட்டிகளின் மூலம், கடமையுணர்வும் கட்டுப்பாடும், கண்ணியமிக்க பணி நடாத்துநர்களை தெரிவு செய்யும் முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெள்ளிக் கிண்ணம், சான்றிதழ்கள் வழங்கப்படும், அத்துடன் பொதுமக்களுக்கும் பரிசுகள் உண்டு. (கெ)

## யாழ். ரோட்டரி நடத்தும் பஸ் நடத்துநர் தெரிவு கூப்பன்

நடத்துநரின் பெயர்...............................

பதிவு இலக்கம்...............................

அனுப்புபவரின் பெயர் ...............................

அனுப்புபவரின் விலாசம்...............................

திகதி ............... ...............................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

ஈழநாடு
The Eelanaadu

# டி. ஐ ஜி. யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரிக்கு தகவல் கொடுத்தது ஏன்?

## தகவல் பதிவிலிருப்பதற்காகவே என்கிறார் குருசாமி

[யாழ்ப்பாணம்]

**டி. ஐ. ஜி. அனுசெனிவரத்தின ஆகஸ்ட் 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்தபோது யாழ்ப்பாண பொலிஸ் அதிபர் செனிவரத்ன, அனுராதபுரத்திற்கு டி. ஐ. ஜி. அனுசெனிவரத்னவிற்கு இரு பொலிசார் சுடப்பட்டது பற்றிய தகவல் அனுப்பியது பதிவில் இருப்பதற்காகவே''**

சன்சோனிக் கமிஷனர் முன் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் குருசாமி குறுக்குவிசாரணையின்போது மேற்கண்டவாறு கூறினார்.

சட்டத்தரணி பார்லட் 3 மணிநேரம்இன்ஸ்பெக்டரை குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: நீர் யாழ் பொலிஸ் நிலைய றேடியோ அறையில் கடமையாற்றினீர்? ஆம்.

கமிஷனர்: காலையில் பார்வையிட்டது எந்த அறை? வயர்லஸ் இயக்கும் அறை

சட்: கொழும்புக்கு றேடியோ தகவல் அனுப்புவதற்கு நீர் பொறுப்பாக இருந்தீர்? ஆம்.

கமிஷனர்: றேடியோ அறைக்கு யார் பொறுப்பு? நான்.

சட்: தகவல் அனுப்புவதற்கு நீர்தான் பொறுப்பு? ஆம்;

சட்: குமாரசாமி தகவல் அனுப்பினாரா? ஆம்.

சட்: எப்ப தெரியும்? அதே தினம்.

சட்: அந்த தகவல் அனுப்பும்போது உமக்கு தெரியாது, ஆம்.

சட்: எஸ். பி. செனிவரத்ன இடமாற்றம் பெற்றுச் சென்றார்? ஆம்.

சட்: அவருக்குப் பதிலாக ரன்முத்துகல வந்தார்?-ஆம்

சட்: றேடியோவில் எஸ். பி தான் தகவல் கொடுப்பது? ஆம்.

சட்: பொய்த் தகவலுமா? உண்மைத் தகவல்.

சட்: பண்ணை சூடுபற்றி தகவல் அனுப்பப்பட்டது? ஆம்

சட்: பண்ணையில் பொலிஸ் விடுதி இருக்கிறது? ஆம்.

சட்: சுடப்பட்டது உமக்கு தெரியும்? ஆம்.

சட்: பொலிசார் வந்து பண்ணையில் சுட்டதாக கூறினார்கள்? ஆம்.

சட்: பொலிஸ்நிலையம் பாதுகாப்பாக இருந்தது?-ஆம்

சட்: உயிரைப் பணயம் வைத்து வந்து, சிலர் சுட்டார்களென்று சொல்கிறீரா? ஆம்

சட்: அதனை நம்பச் சொல்கிறீரா?-ஆம்.

சட்: துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்ததென்பது உண்மை. ஆனால் அது பண்ணையிலல்ல. பண்ணையில் நடந்ததாக அனுப்பப்பட்ட தகவல் பொய். அங்கு சம்பவம் நடக்கவில்லை. பண்ணையில் நடந்ததாக அனுப்பப்பட்ட தகவல் நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ்நிலையங்களுக்கும் சென்று, எல்லாப் பொலிஸாரும் உஷார் நிலையடைந்தார்கள் அப்படி நடக்கவேயில்லை? -நடந்தது

சட்: சார்ஜன்ட் கூரே சென்ற ஜீப்பில் றிசேர்வ் பொலிஸாரைக் கொண்டு சென்றபோது ஒட்டுமடத்தில் விடப்பட்டார்?-தெரியாது.

சட்: சூடு நடந்தது நான்கு மைல்களுக்கு அப்பால், 200 யாருக்கு அப்பாலுள்ள பண்ணையிலல்ல?-தெரியாது

சட்: பொய்த் தகவலை நாடு முழுவதும் அறிய, வானொலியில் கொடுத்தீர்?-இல்லை.

சட்: இத்தகவல் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்திலிருந்து ஆகஸ்ட் 16ந் தேதி மறறப் பொலிஸ்நிலையங்களுக்கு அனுப்பப்பட்டது? இல்லை.

சட்: இரவு 10-25 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்ட இத்தகவல் நள்ளிரவு 12 மணிக்கு அனுராதபுரம் சென்றதினால் பஸாரில் உள்ளவர்கள் அறிந்து, சுமார் 2000 பேர் ரயில்நிலையத்திற்குச் சென்று தமிழரைத் தாக்கவேண்டிய சூழ்நிலை உருவானது?-தெரியாது.

## சன்சோனி கமிஷன் விசாரணை

சட்: 16ந் தேதி டி. ஐ ஜி அனே செனிவரத்ன யாழ்ப்பாணத்திலிருந்தும் பொலிஸ் அதிபர் டி. ஐ. ஜீக்கு எதற்காகத் தகவல் அனுப்பவேண்டும்?-பதவியில் இருப்பதற்காக.

சட்: அப்படியென்றால் தபாலில் அனுப்பலாமே. என்ன அவசரம்?-பொலிஸ் அதிபரைக் கேட்கவேண்டும்

சட்: டி ஐ ஜி இத்தகவலைப் பார்த்திருக்கிறார் இந்தச் சூடு நடக்கவேயில்லை? (பதிலில்லை)

சட்: பண்ணைக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் குழு திரும்பி வரும்போது சிலர் சுட்டனர் என்று தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதுபோல் பதுங்கியிருந்து சுடப் பற்றைகள் இருக்கின்றதா?-பதில் இல்லை.

சட்: நீரே பார்த்துச் சொல்லும். அந்த இடத்தில் பற்றைகள் உண்டா?-பல கட்டடங்கள் உண்டு.

சட்: இங்கிருந்து காட்ட முடியுமா? எனக்குக் காட்ட இடம் தெரியாது.

சட்: எஸ். ஐ குருசாமி, எஸ். பீ.யாக யாழ்ப்பாணத்திலிருந்து தகவல் அனுப்பினார்? (பதிலில்லை)

சட்: பதுங்கியிருக்க இடமில்லை? நான் பதிலளிக்க ஏலாது. அங்கு நான் நிற்கவில்லை.

சட்: அல்விஸும், நந்தசிறியும் சூட்டுக் காயமடைந்ததாகத் தகவல் அனுப்பினீர். நாட்டிலுள்ள எல்லாப் பொலிஸ் நிலையங்களிலும் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறதென்பதை அறிய விரும்பி நின்றார்கள். பொலிஸார் சுடப்பட்டனரென அனுப்பப்பட்ட தகவல், மற்ற இடங்களில் உணர்வை ஏற்படுத்தியது?-ஆம்.

சட்: பொலிசார் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள் என்று மற்ற இடங்களில் கருதிக்கொண்டார்கள்? ஆம்.

சட்: பண்ணை என்றதும், அங்குள்ள பொலிஸ்விடுதி தாக்கப்பட்டதென நினைத்திருப்பார்கள்? இருக்கலாம்.

சட்: 4 மைல் தூரத்திற்குச் சென்று ஒட்டுமடத்தில் சூடு நடந்தது? தெரியாது

சட்: ஜீப் கண்ணாடி உடைந்ததென்றும், பக்க கண்ணாடி உடைந்ததென்றும் தகவல் அனுப்பப்பட்டது? ஆம்

சட்: டைபிள்களுக்கு சேதம் என்றும் இருந்தது? ஆம்

சட்: தகவல் ஏன் அனுப்பப்பட்டது? இந்த தகவலின் காரணம் காயமடைந்த பொலிசாரை விமானத்தில் கொழும்பு கொண்டு செல்வதற்கு

சட்: டி. ஐ. ஜி. யாழ்ப்பாணத்தில் இருக்கையில் அந்தக் காரணமாக வராததே? அதற்குத்தான்

டி. ஐ ஜி. யாழ்ப்பாணத்திலிருந்தார். அவரை நேரில் கேட்டிருக்கலாமே

சட்: இத்தகவலை நீர் யாழ்ப்பாணத்திலிருந்து 10-25 மணிக்கு அனுப்பினீர்? ஆம்

சட்: டி ஐ. ஜிக்கு அனுப்பினீர்? ஆம்

சட்: அவர் யாழ்ப்பாணத்திலிருந்தார்? ஆம்

சட்: சிறுகாயத்திற்கு, யாழ்ப்பாணத்தில் சிகிச்சையளித்திருக்கலாம் கொழும்புக்குச் செல்ல வேண்டிய காரணம் என்ன? தெரியாது

சட்: நாட்டில் சகல பொலிஸ் நிலையங்களும் கஷ்ட நிலையில் கடமைபுரிகின்றன? ஆம்

சட்: சேகுவாரா கிளப்பத்தில் நாட்டில் பல பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டது? ஆம்

சட்: கான்ஸ்டபிள் பண்டார புத்தூரில் சுடப்பட்டார்? ஆம்

சட். ரோந்து பரிசோதனையின் போது சுடப்பட்டார்? ஆம்

சட்: அடையாளம் தெரியாத சிலரால் சுடப்பட்டார்? ஆம்

சட்: இப்படியான சூட்டுச் சம்பவங்கள் தினமும் நாட்டில் நடக்கிறது? ஆம்

சட்: பண்டாரா யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்? ஆம்

சட்: நீர் 15 ம் திகதி காலை ஆஸ்பத்திரிக்கு ஆயுதந்தாங்கிய பொலிசாருடன் போனீர்? ஆம்

சட்: 2 ஜீப்பில் பொலிசார் வந்தனர்? ஆம்

சட்: துண்டுவெட்டாமலே கான்ஸ்டபிள் பண்டாராவை கடத்தி செல்ல பொலிசாருடன் சென்றீர்? இல்லை

சட்: பொலிஸ் நிலையத்தில் 16ம் தேதி பொலிசார் ஆயுதங்கள் எடுத்தபோது பதியப்பட்டதா? உடனே பதியப்பட்டது

கமிஷனர்: ஆயுதம் கொடுக்கும் போது நீர் நின்றீரா? ஆம்

சட்: பதியப்படவில்லையென சாட்சியம் இருந்தால் அது பிழை (பதிவுப் புத்தகத்தைப் பார்வையிடுகிறார்)

சட்: ஆயுதப்பதிவுப் புத்தகத்தில் இருவெவ்வேறான எழுத்துக்கள் உள்ளது? ஆம்

சட்: வழக்கமாக திகதி போட்டு பதிவு எழுதப்படும்? ஆம்

சட்: இதில் தேதி வேறு எழுத்திலும் பதிவு வேறு எழுத்திலும் இருக்கிறது? ஆம்

சட்: நீர் ஒரு பொறுப்புள்ள அதிகாரியாக இருந்தால் முதலில் எழுதப்பட்ட காகிதத்தை அழித்திருக்கமாட்டீர்? ஆம்

சட்: காகிதம் இல்லை அழிக்கப்பட்டுள்ளது? ஆம்

சட்: நீர் ஒரு பொறுப்புள்ள அதிகாரியாக இருந்தால் இப்படி தகவல் கொடுத்திருப்பீரா? அப்படி எண்ணமில்லை

சட்: பண்டாராவை சிகிச்சைக்காக அனுப்பினீர்? ஆம்

சட்: கார் அனுராதபுரத்திற்கு பண்டாராவை கொண்டு சென்றது? ஆம்

சட்: அன்றிரவு அனுராதபுரம் ரயில் நிலையத்தில் தாக்குதல் நடந்தது? ஆம்

சட்: யாழ் ஆஸ்பத்திக்கு 10 பேர் துவக்குடன் சென்றீர்கள்? ஆம்

சட்: நீர் இறங்கினீரா? ஆம்

சட்: 17 ம் வார்ட்டுக்கு போனீரா? ஆம்

சட். புறப்படத் தயாராக இருந்தீரா? ஆம்

சட்: நீர் ஒரு ஜீப்பிலும், அவர் ஒரு ஜீப்பிலும் ஏறினீர்கள்? ஆம்

சட்: அவர் தன்னுடன் டிக்கட்டையும் கொண்டுபோனார்? தெரியாது

சட்: ஆஸ்பத்திரி ஓவசியர் மயில்வாகனம் வந்து அதை வாங்கிச் சென்றார்

சட்: பண்டாரா டிக்கட்டை கொடுத்தார்? ஆம்

சட்: (ஆஸ்பத்திரி டிக்கட்டை காட்டி) இது பண்டாரா பின் எடுத்தது? ஆம்

சட்: என் சொந்தவிருப்பப்படி போகிறேன் என எழுதப்பட்டுள்ளது? ஆம்

சட்: பண்டார ஏன் வந்தார்? ஆஸ்பத்திரியில் அவருக்கு அளித்த சிகிச்சையில் திருப்தப்படவில்லை

சட்: பண்டாராவை கடத்தி அனுராதபுரம் அனுப்பப் போனீர்? இல்லை

சட்: மயில்வாகனத்திடம் கேட்டபின் போகவில்லை? இல்லை

சட்: எவரும் ஆஸ்பத்திரி பெட் டிக்கட்டை கொண்டு போகமுடியாது அங்கு சில நடைமுறை உண்டு? ஆம்

சட்: பண்டார தனக்குத் தானே துண்டு வெட்டி சென்றார்? தெரியாது

சட்: டாக்டர் அல்லது பொறுப்பாளர் துண்டு வெட்டி அனுப்புவார்? ஆம்

சட்: அப்படியானால் அவர்கள் சொல்லாமல் சென்றதேன்? தெரியாது

சட்: பண்டாராவை கூட்டி வரச்சென்றதற்கு பொலிஸ் நிலையத்தில் என்ரி இருக்கிறதா? தேவையில்லை

சட்; ஜீப் கொண்டு சென்றதற்கு என்ரி இருக்கிறதா? காட்டமுடியுமா? ஆம்

கமிஷன்: என்ரி இருக்கிறதா? ஆம் (புத்தகங்களைப் பார்க்கிறார்)

சட்: என்ரி இருக்கிறதா? இல்லை

(6ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெறலாமென்ற நம்பிக்கையுடன் இலங்கையில் இருந்து புறப்பட்ட எண்ணூற்றுக்கும் அதிகமான இலங்கை இளைஞர்கள் இப்போது பாகிஸ்தானில் கராச்சி வீதிகளில் எங்கே போவது? என்ன செய்வது? என்று தெரியாமல் அலைந்து திரிகிறார்களாம்.

இந்த இளைஞர்களில் சிலர் தங்களுடைய பாஸ்போர்ட்டுகளை விற்றும், சிலர் வீதிகளில் அடிமைகள் போல் வேலைசெய்தும் உயிரைக் காப்பாற்றுவதற்குப் போராடுகிறார்களாம்.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெறலாமென்ற நம்பிக்கையில் எதுவித உறுதியுமில்லாமல் உள்ளகாணியையோ, பூமியையோ விற்று அல்லது தாயின் தாலிக்கொடியையும் மற்றும் உடைமைகளையும் விற்றோ ஈடு வைத்தோ இலங்கையிலிருந்து புறப்பட்டு வெளிநாடுகளில் உள்ளதையும் இழந்து திரும்பியவர்களின் கதையும் உண்டு.

இங்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதிலுள்ள கஷ்டங்களும், வேலை கிடைத்தாலும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக்கூடிய வருமானம் கிடைக்காததுமே இளைஞர்கள் பலரும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைத் தேடிப் புறப்படுவதற்குக் காரணமாகும்.

வேலை கிடைக்காமல், தாய் தகப்பனுக்குப் பாரமாக இருந்தது மட்டுமின்றிச் சீதனம் கொடுக்க வழியின்றி மூலையில் கிடந்து, பெருமூச்சு விட்ட சகோதரிகளைப் பார்த்துக் கண்ணீர் விட்ட இளைஞர் பலர் எப்படியோ வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தங்கள் நிலையையும் குடும்பத்தின் நிலையையும் உயர்த்தியிருப்பது உண்மைதான்.

யாழ்ப்பாணத்தில் புதிய வீடுகள் தோன்றிக்கொண்டிருப்பதற்கும் புதிய புதிய கார்கள் வீதிகளில் ஓடிக்கொண்டிருப்பதற்கும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்ற இளைஞர்களின் உழைப்புத்தான் காரணம்.

இதனால் மற்றும் இளைஞர்கள் பலரும் வெளிநாடு செல்வதற்கு முயற்சிசெய்வதில் தவறு சொல்லமுடியாது.

சில வருடங்களுக்கு முன்னர் மலாயாவும் சிங்கப்பூரும் இலங்கையரின் உழைப்புக்கு மதிப்புக் கொடுத்தன. இன்னமும் அந்த உழைப்பை, அந்த நாடுகள் மதித்து அவர்கள் பயன்பெறுவதற்கு வழி வகுத்துள்ளன.

பின்னர் நைஜீரியா இப்போது மத்திய கிழக்கு நாடுகளில் நமது நாட்டு இளைஞர்களின் உழைப்புக்கு மதிப்பிருக்கிறது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத்தான் வேண்டும். அதற்காகப் போதிய ஏற்பாடுகளோ உறுதியோ இல்லாமல் நாட்டை விட்டுப் புறப்படுவது இளைஞர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் மட்டுமல்ல நாட்டுக்கே நல்லதல்ல.

வேலைவாய்ப்பு வெளிநாடுகளில் கிடைத்தாலும் என்றும் வெளிநாடுகளையே நம்பியிருக்கமுடியாது. எனவே உள்நாட்டிலேயே நமது உழைப்பை நம்பி வாழ முயற்சிப்பதுதான் நிரந்தரமானது என்பதை மறந்துவிடக்கூடாது.

## மணிவாக்கு

தங்கள் இதயத்தை எந்த அளவுக்கு பக்குவப்படுத்திக் கொள்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் அவர்கள் வாழ்க்கையில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

—ரூஸோ

# ''கணவரின் சடலத்தை நான் கடைசிவரை காணவில்லை''

## அழுதவாறே பெண் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜலட்சுமி குணரத்தினம் சன்சோனிக்கமிஷன் முன் கூறியதாவது:

''ஆகஸ்ட் கலவரத்தின் போது என் கணவர் அனுராதபுரத்தில் பொறியியலாளர் கந்தோரில் பிரதம லிகிதராக இருந்தார். அனுராதபுரத்தில் பட்டணத்தில் குண்டர்களால் என் கணவர் தாக்கப்பட்டார். பொலிசார் என் கணவனின் சடலத்தைக் கண்டெடுத்தது. பொலிஸ் தகவல் கிடைத்தது.

யாழ்ப்பாணத்திற்கு சடலத்தைக் கொண்டுவர முயற்சி எடுத்தோம். மறுத்துவிட்டார்கள். எனக்கு 4 பிள்ளைகள். கணவருக்கு 47 வயது உயிருடன் இருந்தால் இன்னும் 13 வருடம் கடமையாற்றி இருப்பார். எனக்கும் பிள்ளைகளுக்கும் சமூகசேவை இலாகா 12,000 ரூபா தந்தது.

சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவரை கடைசிமுறையாகக் காணமுடியாமல் போய்விட்டது ஐயா என்று அழுதழுது கூறினர் ராஜலட்சுமி.

இன்றுவரை அவரது சடலம் கிடைக்கவில்லை என்றும் கூறினர். (க-அ)

''கூட்டணிக்கு நிதி உதவும்

# பொலிசார் கண்டுபிடிக்கப்பட்டால் தென்பகுதிக்கு மாற்றப்படுவர்'

## டி.ஐ.ஜி. சொன்னதாக சாட்சிய

[யாழ்ப்பாணம்]

பண்டாரகுளம் இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் சங்கரப்பிள்ளை கார்த்திகேசு சன்சோனிக் கமிஷன் முன் கூறியதாவது:

ஆகஸ்ட் கலவரத்தின்போது நான் வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினேன். செப்டம்பர் 29ம் திகதி இளைப்பாறினேன்.

காசிப்பிள்ளை கடைக்குப் பக்கத்தில் அங்கு நான் வசித்து வந்தேன். எஸ் ஐ நாதன் 13ம் திகதி கொழும்புக்கு போய்விட்டு 17ம் திகதி வவுனியா வந்தார். தமிழ்ப் பொலிசார் மனச்சோர்வுடன் இருந்தனர். நாதன் வந்து கேட்டார். டி ஐ ஜி வந்து வகுப்பு நடத்தியது பற்றிக் கூறினேன். ஆகஸ்ட் 15ம் திகதி வகுப்பு நடத்தினர். யாழ்ப்பாணத்தில் இளைஞர்களின் நடத்தை பற்றிக் கூறினர். தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு நிதிஉதவிசெய்வதாகவும், அது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் தென்பகுதிக்கு இடமாற்றம்செய்யப்படுவார்கள் என்றும் கூறினர். மற்றும் சந்தோர் விஷயங்கள் பற்றியும் கூறினர் தமிழ்ப் பொலிசார் உஷாரடைந்தனர்.

### கூட்டணி நிதி சேர்த்ததை நான் பார்க்கவில்லை

தமிழர் கூட்டணிக்கு நான் நிதியுதவி அளிக்கவில்லை. மற்றும் தமிழ்ப் பொலிசாரும் கூட்டணிக்கு நிதியுதவியளித்தது பற்றித் தெரியாது. பொலிஸ்நிலையத்திற்குக் கூட்டணித் தலைவர்கள் வந்து நிதிசேர்த்ததை நான் பார்க்கவில்லை.

ஆகஸ்ட் 21ம் திகதி இரவு நான் கடமையில் இல்லை. வீட்டில் இருந்தேன். அங்கிருந்தால் பஜாரில் நடப்பது தெரியும். அன்று ஊரடங்குச்சட்டம். அந்நேரம் ஆட்கள் வீதியில் நடமாடிக்கொண்டிருந்தார்கள் இதையிட்டு ஆச்சரியப்பட்டேன். ஆட்கள் பொலிஸ் நிலையம் போனர்கள். பின் அம்பலாங்கொடை கடைக்குப் போனர்கள். நான் சந்தேகப்பட்டேன். இரவுறைபின் சூடு கேட்டது. லொட்டை இரண்டு பொலிசார் சுட்டு அணைத்தனர். இருவரைத் தெரியும். மெண்டிஸ் அபயக்கோன் ஆகியோரை நான் பார்த்தேன்''. (க-அ)

கலவரத்தில் பாதிக்கப்பட்ட

# எனது முறைப்பாட்டுக்கு பொலீஸ் நடவடிக்கையில்லை

## கான்ஸ்டபிள் சாட்சியம்

பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் க தில்லைநாதன் சன்சோனிக் கமிஷன் முன் கூறியதாவது:-

''ஆகஸ்ட் 77 ல் நான் அனுராதபுரத்தில் கடமையாற்றினேன். திருமணம் செய்து பிள்ளைகளுடன் அங்கு இருந்தேன். மனைவி 8 மாதக் கர்ப்பிணியாக இருந்தார்.

''கலவரத்தின்போது சிலர் வந்து என் வீட்டைத் தாக்கப் போவதாகப் பயமுறுத்தினர்கள். பயத்தினால் நாங்கள் வயல் பக்கமாகப் பொலிஸ் நிலையம் போனோம்.

வீட்டுக்குப் பாதுகாப்புத் தரும்படி கேட்டேன். பாதுகாப்புத் தரவில்லை.

ஆகஸ்ட் 19ம் தேதி பெட்ரோல் டியூட்டிக்குப் போன போது என் வீடு எரிக்கப்பட்டது. பின் யாழ்ப்பாணம்வந்து பொலிஸில் புகார் செய்தேன். ஒருவரின் பெயர்களைக் கொடுத்தேன். பிரதி அனுராதபுரம் அனுப்பப்பட்டது. ஒன்றும் நடக்கவில்லை. பின் அனுராதபுரம் சென்றேன் என் புகார் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்தது. டி.ஐ ஜி. வந்து அங்கு வகுப்பு நடத்தினர்; நான் வகுப்புக்குப் போகவில்லை. (க-அ)

# 'கணவன் காட்டில் கொலையுண்டார்'

## கைம்பெண் சாட்சியம்

லாலி செல்லம்மா சின்னத்துரை என்பவர் சன்சோனிக் கமிஷன்முன் கூறியதாவது:

என் கணவர் கந்தையா சின்னத்துரை லொறி கிளீனராக இருந்தார். ஆகஸ்ட் கலவரத்தின்போது கெக்கராவையில் இருந்தார். சாரதியும் சொந்தக்காரரும் சென்றனர். ஆகஸ்ட் 17ம் திகதி லொறிகெக்கராவையில் இருந்தது. லொறியை சுப்பிரமணியம் மில்லில் நிறுத்திவைத்தனர். மில் தாக்கப்பட்டது. எல்லோரும் காட்டுக்குள் ஓடினர்கள் சாரதி கந்தையா அதன் பின்பு வந்தார். என் கணவரும் சொந்தக்காரரும் திரும்பவில்லை. அவர்கள் காட்டில் கொல்லப்பட்டு விட்டனர்.

எனக்கு 3 பிள்ளைகளுண்டு கடைப்பிள்ளைக்கு 14 வயது. சீவியத்திதுக்கு வழியில்லை. நஷ்டஈடும் கிடைக்கவில்லை. (க அ)

### டாக்டர் ஹனிமான் பிறந்தநாள் விழா

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை ஹோமியோபதிவைத்தியசங்கத்தின் 19வது ஆண்டுவிழாவும் ஹோமியோபதியின் தந்தை டாக்டர்சாமுவேல் ஹனிமானின் பிறந்தநாள் விழாவும் இம்மாதம் 9ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.

டாக்டர் ஏ கிருஷ்ணசாமி தலைமையில் யாழ் ஆஸ்பத்திரி வீதி, ஏ எஸ் சங்கரப்பிள்ளை கட்டிடத்தின் 3வது மாடியில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதமவிருந்தினர்களாக யாழ் எம். பி. திரு. வீ. யோகேஸ்வரனும், ஹோமியோபதிடாக்டர் எஸ் எஸ் ஏ ரஹ்மானும் கலந்துகொள்கிறார்கள்,

தொடர்ந்து நடைபெறும் கருத்தரங்கில் பிரபல டாக்டர்கள் கருத்துரை வழங்குவர்.

### யாருடையது?

யாழ். பொதுஜன நூல்நிலையத்திற்கு முன்னால் தையல் நிறுவனமொன்றைச் சேர்ந்த எம் ஏ எம் தையிப் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையுடன் கூடிய டயறி ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்வந்து பெற்றுக்கொள்ளவும்.

''தமிழ்நாடு கலைஇலக்கிய மாநாடு:

# ஈழத்தவர் கலந்துகொள்ள ஏற்பாடு செய்வேன்''

— கல்யாணசுந்தரம்

(வெள்ளவத்தை)

''தமிழ் நாட்டில் மே மாதம் நடைபெறவிருக்கும் கலை, இலக்கிய பெருமன்றத்தின் மாநாட்டில் இலங்கையில் கலை, இலக்கியத்துறையைச்சார்ந்தவர்கள் கலந்துகொள்ள வேண்டும். அதற்கான அழைப்புகளை அனுப்ப ஏற்பாடுசெய்வேன்.''

இவ்வாறு தமிழக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் அழைப்பு விடுத்தார்.

தாயகம் திரும்புவதற்கு முன்னர் இந்த வேண்டுகோளை பத்திரிகையாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்புகளைப்பற்றியும் கலை, இலக்கியத்துறைகளில் இந்தியத் திரைப்படங்களால், சஞ்சிகையால் ஏற்பட்டுவரும் பாதிப்புகளைப்பற்றியும் தமிழக மக்களுக்கு நீங்களே அறிவிக்க ஒரு வாய்ப்பாக இது இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். [அ]

# புளியம் பொக்கனை சிவாலயத்திற்கு புதிய திருவுருவங்கள்

(அராலி)

ஈழத்து சிவதலங்களில் ஒன்றான புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தில் புதிய இலிங்கமொன்றையும் கௌரி அம்மன் மூர்த்தியையும் ஆகம விதிப்படி பிரதிஷ்டைசெய்யும்நோக்கமாக திருவுருக்கள் செதுக்கப்படுகின்றன. ஸ்தபதி திரு. அ தில்லையம்பலத்தின் கைவண்ணத்தில் உருவாகி வரும் இத் திருவுருவங்கள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளன. பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் மூன்று பாகமும் சேர்ந்தது இச் சிவலிங்கம்

மனுநீதிகண்ட சோழனின் புதல்வனுகிய குளக்கோட்டு மன்னனால் ஈழத்திற்கு வரவழைக்கப்பட்ட வன்னியர் பரம்பரையில் வந்த வன்னித் தலைவனொருவனின் மனைவி வயிற்றில் பாம்பு வடிவில் மகவு பிறந்ததென்றும் அப்பாம்புக் குழந்தைக்கு அமைத்த இல்லமே இந் நாகதம்பிரான் ஆலயமாயிற்று என்றும் ஆனல் இச்சிவாலயத்தில் வழிபாடியற்றப்பட்டு வந்த மாணிடலிங்கம் சில விஷமிகளால் பெயர்த்தெடுக்கப்பட்ட தென்றும் கூறப்படுகிறது.

இச் சிவாலயத்தில் மீளவும் புதிதாக இலிங்க கௌரி அம்மன் திருவுருக்கள் அமைக்க வேண்டுமென்னும் சைவ அடியார்களின் ஆசையால் ஆகம விதிப்படைப்பட்ட கருங்கற்களில் திருவுருவம் செதுக்கும் வேலைக்கு அராலியில் பரம்பரை பரம்பரை ஸ்தபதியாக விளங்கும் தில்லையம்பலம் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளார். இலங்கையில் செதுக்கப்படும் முதல் கௌரியம்மன் சிலை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ''மதுவிலக்கு மூலமே ஏழைகள் வாழ்வில் விடிவு''

## தமிழக ஆளுநர் உரை

கல்கத்தா, ஏப். 2 கூறினர்.

''நாட்டில் ஏழைமக்கள் நல்வாழ்வுபெற மதுவிலக்கு வெற்றிகரமாக அமுல் நடத்தப்படவேண்டும்'' என்று தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி கல்கத்தாவில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் ''ஊழலற்ற தூய்மையான ஆட்சியமைப்பையே மக்கள் விரும்புகிறர்கள்என்பதுகடந்த லோகசபைத் தேர்தல் முடிவு மூலம் தெரிந்துவிட்டது'' என்றும் ஆளுநர் சொன்னர். (உ)

# ரசிகர்கள் தொல்லை; படப்பிடிப்பு ரத்து!

(வெள்ளவத்தை)

விஜயா ஸ்டுடியோவில் நடைபெற்ற 'பைலட் பிரேம்நாத்' படப்பிடிப்பின்போது ரசிகர்களின் அன்புத் தொல்லை காரணமாக, படப்பிடிப்பை ரத்துச்செய்யுமாறு கூறிவிட்டு, 'செட்டை' விட்டு வெளியேறினர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்!

மேற்படி சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை விஜயா ஸ்டுடியோ படப்பிடிப்பு அரங்கில்' கோப்பித் தோட்ட முதலாளிக்கு கொழும்பிலே தான் கல்யாணம்' என்ற பாடல் காட்சி படமாக்கப்படும்போது நடந்தது.

மேற்படி பாடல் காட்சியில் நடிகர்கள் மேஜர் சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன், நடிகைகள் ஜெயசித்ரா, மனோரமா ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாடல் காட்சியை, வெகு துரிதமாக படமாக்கிக்கொண்டிருந்தார் டைரக்டர் ஏ. ஸி. திருலோகசந்தர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் முன்னிலையில் தேங்காய் சீனிவாசன், ஜெயசித்ரா, மேஜர் சுந்தரராஜன் ஆகியோர் ஆடிப்பாடிக்கொண்டிருந்தனர். பாடல் காட்சியைப் படமாக்கும்பொழுது ரசிகர்கள் விஜயா ஸ்டுடியோவை முற்றுகையிட்டனர். ரசிகர்கள் பலர் படப்பிடிப்பை பார்க்கவும் அனுமதிக்கப்பட்டனர். பெருந்தொகையான ரசிகர்கள் பார்வையாளராக வந்திருந்தத காரணத்தால் படப் பிடிப்புக்கு இடையூறு ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் படப்பிடிப்பைப் பார்க்க வந்த ரசிகர்களின் அன்புத் தொல்லை காரணமாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் படப்பிடிப்பு அரங்கத்திலிருந்து வெளியேறினர் அவர் வெளியேறியதைத் தொடர்ந்து படப் பிடிப்பு நிறுத்தப்பட்டது.

''இன்றிரவு பத்து மணி வரை படப்பிடிப்பு நடத்தத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் ரசிகர்களின் தொல்லையால் படப் பிடிப்பு நடத்தமுடியாமற்போய்விட்டது'' என்று படப் பிடிப்பு நிர்வாகி ஒருவர் வருத்தம் தெரிவித்தார்.

லண்டன், ஏப். 2

ஒரு வாரமாக லிஸ்பனில் நடைபெற்று முடிந்த சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில்; தென் லெபனனில் இருந்து இஸ்ரேலியத் துருப்புகள் வெளியேற வேண்டும் என்று கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (உ)

பொம்மைவெளி நாவாந்துறை

# எரிந்த வீடுகளுக்குப் பதில் புதிய நிரந்தர வீடுகள்!

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை, பொம்மை வெளி ஆகிய பகுதிகளில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது எரிந்து போன வீடுகளுக்குப் பதிலாக தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் உதவியுடன் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

இப்பகுதி மக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிப்பது தொடர்பாக ஆலோசிப்பதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணச் செயலகத்தில் கூடிய உயர் அதிகாரிகள் மாநாட்டில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண எம் பி திரு. வெ. யோகேஸ்வரன் ஏற்பாடு செய்த இம்மாநாடு யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

திரு. யோகேஸ்வரன் எம் பி யாழ் மேல் நீதிமன்ற நீதியரசர் ஜனாப் எம். எம். அப்துல் காதர், மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். ஜெகநாதன், உதவி அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ் வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு.இராசரத்தினம், யாழ் மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. கே சிவஞானம், மாவட்டக் காணி அதிகாரி ஜனாப் எம். எம். மக்பூல், சமூக சேவை அத்தியட்சகர் திரு. கெங்காதரன் ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

பொம்மைவெளி, நாவாந்துறை ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பொம்மைவெளி குடியேற்றத் திட்டத்தில் இதுவரை வீடு கட்டாதவர்களுக்கும் வீடமைப்புத் திணைக்களத்திடம் இருந்து 8,500 ரூபா பெறுமதியான கட்டடப் பொருட்களைப் பெற்றுக்கொடுத்து நிரந்தரமான வீடுகள் அமைத்துக் கொடுப்பதென்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

8,500 ரூபா பெறுமதியான சீமெந்து, கல், ஜன்னல், கதவுகள் ஆகியவற்றை வீடமைப்புத் திணைக்களத்திடமிருந்து பெறுபவர்கள் திணைக்களத்திற்கு வட்டியின்றி மாதாந்தம் 15 ரூபா வீதம் திருப்பி வழங்கலாம்.

இதேவேளையில் அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு, யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் தஞ்சமடைந்துள்ள பொம்மைவெளி வாசிகள் தற்காலிகமாகத் தங்குவதற்கு விடுதிவசதி செய்துகொடுப்பதென்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. (இ)

## துப்பாக்கிமுனையில்லட்சருபா பொருள் கொள்ளை

(கொழும்பு)

பிஸ்டல், கத்திகள் சகிதம் வீடொன்றினுள் புகுந்த அறுவர்கொண்ட இளைஞர்கோஷ்டி ஒன்றுவீட்டுக்காரரைச் சுட்டுவிட்டு, ஒரு லட்சத்து மூவாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இக்கொள்ளை பட்டப்பகல் வேளையில் மத்துகமையில் நடைபெற்றுள்ளது.

பொலிஸார் புலன்விசாரணை நடத்துகின்றனர். (உ)

யாழ்ப்பாணத்தில்

## விஞ்ஞான சித்திர கைப்பொருள் பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டரிக் கழகம் எதிர்வரும் மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் விஞ்ஞான, சித்திரக் கைப் பொருள் பொருட்காட்சியை நடத்த ஒழுங்கு செய்துவருகின்றது.

இப்பொருட்காட்சியில் வடமாகாணத்திலுள்ள சகலபாடசாலைகளும் பங்கு கொள்ள வசதியளிக்கப்படும் என்றும் இதன்மூலம் மாணவ மாணவிகளை, விஞ்ஞானம், சித்திரம், கைப்பொருள், சமையல் தையல் ஆகிய துறைகளில் ஊக்குவிப்பதேநோக்கம் என்றும் பொருட்காட்சியில் சிறந்தவைகத் தெரிவு செய்யப்படும் சிறப்பு அம்சங்களுக்கு விலையுயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கெ)

## யாழ்.திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் சிவானந்த மாதர்சங்கத்தினரால்ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை நேரத்தில் சமய, கைப்பணி வகுப்புகள் நடைபெறுகின்றன. நல்லூர் சச்சிதானந்த சிறுவர் சங்கத்தினரின் ஆண்டுவிழா 9ம் திகதி நடைபெறுகிறது.

......

## வழிப்பறி கொள்ளை

(கொட்டாஞ்சேனை)

கொட்டாஞ்சேனையில் நேற்று அதிகாலை ஆயுத முனையில் ஒருவரை நிறுத்திய இருவர் அவரிடம் இருந்த கடிகாரத்தையும், தங்கமோதிரத்தையும் அபகரித்துச் சென்றுவிட்டனர். (உ)

......

## கொள்ளையில் புதுமை

(உடுப்பிட்டி)

ஒழுங்கையால் சென்றுகொண்டிருந்த பெண்மணியொருவரிடம் யாரோ ஒருவருடைய வீட்டைக்காட்டுமாறு கேட்டநபர் ஒருவர் திடீரென்று பெண்மணியின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார். இத்துணிகரத் திருட்டுச் சம்பவம் கரவெட்டி மேற்கு கனுவில் கூட்டுறவுச் சங்கக் கடைக்கு அருகில் நிகழ்ந்தது.

பிரஸ்தாப பெண்மணி சங்கிலியை அறுத்துக் கொண்டு சைக்கிளில் ஓடியவரின் பின்னால் குளறிக்கொண்டு துரத்தியபடி ஓடவே, வீதியில் முன்பக்கத்தால் வந்துகொண்டிருந்தவாலிபர்கள் "திருடனை" மடக்கிப் பிடித்துச் சங்கிலியை மீட்டனர். (உ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கல்வி வட்டார மெய்வல்லுநர்போட்டி இன்று மாலை யாழ் இந்துமகளிர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இப்போட்டி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். இப்போட்டிகளுக்கு நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம் தலைமைதாங்குவார். பிரதம விருந்தினராக நல்லூர் எம் பி திரு மு சிவசிதம்பரம் கலந்துகொள்வார்.

ஃ ஃ ஃ

தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்கப்பிள்ளையார் கோவில் பஞ்சமுக விநாயகப் பெருமானின் நூதனப்பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. இவ்வைபவத்தையொட்டி ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் "ஐம்முகன் பேரருள்" என்னும் பொருள்பற்றி அருளுரை நிகழ்த்துவார், கும்பாபிஷேகம் என்னும் பொருள்பற்றி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுவார். [கெ]

---

## பயணம்

(உடுப்பிட்டி)

யாழ்.வேம்படி வீதியைச் சேர்ந்த திரு. ஏ. அலோசியஸ் புஷ்பராஜா தொழில் வாய்ப்புப் பெற்று மத்திய கிழக்கில் உள்ள பாரெயினுக்குப் பயணமானார். இவர் யாழ். சென் பற்றிற்ஸ், இளவாலை சென். ஹென்றீஸ் ஆகியவற்றின் பழைய மாணவரராவார் திரு, அமிர்தலிங்கம் தம்பதிகளின் புதல்வனான இவர் கிளிநொச்சி லோங்ஸ் நிறுவனத்தில் தொழிற் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். (உ)

## 'நொக்கவுட்' சாம்பியன் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நடைபெற்ற "நொக்கவுட்" உதைபந்தாட்டப் போட்டியின், இறுதிசாம்பியன் மோதல். இம்மாதம் 13-ம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இந்தஇறுதி சாம்பியன் மோதலில், பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் குருநகர் பாடும்மீன்' விளையாட்டுக் கழகமும் மோதிக்கொள்ளவிருக்கின்றன.

இந்த சாம்பியன் மோதலுக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்படி லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. வி. பிலிப்ஸ் மேற்கொண்டு வருகின்றார்.

•••

## கத்தி முனையில் தாலி கொள்ளை

(கண்டி)

சமையலறையில் இருந்த பெண் ஒருவரைக் கத்திமுனையில் மிரட்டிய ஒருவன், அவரது தாலி உட்பட, 13,000 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச்சென்றுவிட்டானும்.

கண்டியில் இச்சம்பவம் நடந்தது. இவனுடன் மற்றொருவரும் வந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்விருவரும் இளநீர் விற்பவர்களெனத் தெரியவந்துள்ளது. பொலிசார் இவர்களைத் தேடிவருகின்றனர். (உ)

## ' கல்விப்பணிப்பாளருக்கே அனுப்பவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"1977ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்திபெற்ற க. பொ. த. (உயர்தரம்) வகுப்புகளில் கற்கத்தகைமையுடையவர்கள், யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சேர்வதற்கான விண்ணப்பங்களை யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளருக்கே அனுப்பவேண்டும். பாடசாலை அதிபர்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பினால் அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது" என்று வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

யாழ். வேம்படி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அதிபர்கள் மகாநாட்டில் இத் தீர்மானம் உதவி கல்வி மா அதிபர் திரு. மகத்தந்திரா வால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"இத் தீர்மானத்துக்கு அமைய, கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைசெய்யப்பட்டு வகுப்புகளை ஆரம்பிப்பதற்காக கல்லூரிகளுக்கு அனுமதிவழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு மே மாதம் 15ந் திகதி அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கெ)

## 'வேலைவாய்ப்புக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் மூலம் பதிவுசெய்க'

(யாழ்ப்பாணம்)

"அரசாங்கத்தால் அமுலாக்கப்பட்டுள்ள 'தொகுதிக்கு ஆயிரம் பேருக்கு வேலை' வழங்கும் திட்டத்திற்கு, நல்லூர்த் தொகுதியில் பெயர்களைப் பதிவுசெய்ய விரும்புவர்கள் நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் மூலம் பெயர்களைப் பதிவுசெய்யவேண்டும்" என்று நல்லூர் தேசியபேரவை உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், நல்லூரில் பத்து கிராமசேவகர் பிரிவுகளுக்கும் பத்து தமிழர் விடுதலைக்கூட்டணிக்கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றின் மூலமே வேலைவாய்ப்பு படிவங்களுக்கு பெயர்களை பதியவேண்டும் என்றும் வலியுறுத்தி கூறியுள்ளார்.

நல்லூரில் அமைக்கப்பட்ட கிளைகளின் விபரம் வருமாறு:

### நல்லூர்

தலைவர்: திரு மு ஆலாலசுந்தரம். செயலாளர்: திரு சு. துரைராஜா, பொருளாளர் திரு சி கமலநாதன். 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது.

### அரியாலை கிழக்கு

தலைவர் திரு ச முத்துச்சாமி, செயலாளர்: திரு இ கனகரெட்ணம், பொருளாளர் சி த செல்லத்துரை, 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது.

### அரியாலை மேற்கு

தலைவர்: திரு நா இராமலிங்கம், செயலாளர் திரு அ சோதிலிங்கம், பொருளாளர்: திரு சி சதாசிவம், 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது. [இ]

## வைத்தீஸ்வராவில் சாரணர் விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் புனரமைப்புச் செய்யப்பட்ட சாரணர் இயக்க விழா, கல்லூரி அதிபர் திரு. ஏ. நடராசா தலைமையில், கல்லூரி முன்றலில் நடைபெற்றது.

சாரணர் கொடி, அதிபரால் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அனைவரதும் முன்னிலையில் சாரணர் 'இளம் பாதன்' பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கல்லூரிச் சாரண ஆசிரியர் திரு. வே.சிவஞானத்தால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு, 'இளம் பாதன்' சின்னங்களும் அணிவிக்கப்பட்டன. ஆசிரியர் திரு. எஸ். கே. சுந்தரலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியிற் கலந்துகொண்ட யாழ்ப்பாண மாவட்டச் சாரணத் தலைவர் திரு. நா. நல்லையா, சாரணக் கட்டு 'ஸ்காப்' அணிவித்தார். சிறப்பு விருந்தினராக, உதவி மாவட்ட ஆணையாளர் திரு. பா.நே பொன்னையா கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில், "இவ்வியக்கம் மாணவரை நாட்டின் நற்பிரசையாக்குகிறது" என்று கூறி, இயக்கத்தின் சிறப்புக்கும், வளர்ச்சிக்கும் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தார்.

## பிரயாணிகள் அவதி

(உடுப்பிட்டி)

வவனியாவிற்கும்-மன்னாருக்கும் இடையேயான பஸ் சேவை சீர்கேடான நிலையிலிருப்பதால் பிரயாணிகள் பெரும் அவதியுற்று வருகின்றனர்.

இந்த பஸ்சேவை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதால் இப்பஸ் வண்டியை எதிர்பார்த்திருக்கும் பிரயாணிகள் சகல தேவைக்கும் யாழ்-மன்னார் சேவையிலீடுபடும் பஸ் வண்டியை காத்து நிற்கவேண்டி உள்ளது.

இப்பஸ் சேவையைச் சீரமைத்துத் தமது கஷ்டங்களைப் போக்குமாறு பிரயாணிகள் மன்னார்-வவனியா எம்.பி.க்களைக் கோரியுள்ளனர். (உ)

---

## சுயமுயற்சியில்...

5ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் நடவடிக்கை கல்வி அமைச்சின் கவனத்திற்கு ஆசிரியர் தேவையை சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுப்பதாகும். கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் பாடசாலையில் வேண்டியளவு இல்லையானால், மாணவர்கள் யாரிடம் பாடம் கேட்டுப் படிப்பது. பாடசாலையின் தேவைகள் பல இருப்பினும் நாம் முக்கிய தேவைகள் சிலவற்றை இந்த ஆண்டில் நிறைவேற்றுவோம். வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பாடசாலைகளின் தேவைகள் யாவும் அதிகாரிகளின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது விரைவில் என்ன நடக்கின்றது என்பதைப் பார்ப்போம்" என்றார்.

......

## கிளிநொச்சியில்

[1ம்பக்கத் தொடர்ச்சி]

நிவாரணம், கல்வி வசதியற்றவர்களுக்கு இலவச கல்வி வசதி அளித்தல் விவசாய அபிவிருத்தி ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

இக்கோட்டத்தை நிறுவுவதற்காக கட்டடக் கலைஞர் திரு வி எஸ் துரைராஜா(தலைவர்), திரு சாந்திதாசன்(செயலாளர்), திரு கே கே விஜய இந்திரா (பொருளாளர்) ஆகியோர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவின் முதற்கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது. [இ]

# பூட்டோவின் அப்பீல் மே 6-ல் ராவல்பிண்டியில் விசாரணை

லாகூர், ஏப் 2

முன்னுள் பாகிஸ்தான் பிரதமர் ஜனுப் அல்பிகார் அலி பூட்டோ லாகூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அப்பீல் மனு மீதான விசாரணை அடுத்த மாதம் 6-ம் திகதி ராவல்பிண்டியில் உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் என்று லாகூர் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதன்காரணமாகதற்போது லாகூர் சிறையிலிருக்கும் ஜனுப் பூட்டோவை ராவல்பிண்டிக்கு மாற்றுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### பூட்டோவின் மற்றைய மனு நிராகரிப்பு

தற்போதிருக்கும் சிறைச்சாலையைவிட வசதிகள் அதிகம் உள்ள சிறைச்சாலைக்கு தம்மை மாற்றுமாறு ஜனுப் பூட்டோ தாக்கல்செய்திருந்த மற்றைய மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

ஜனுப் பூட்டோ தற்சமயம் தங்கியிருக்கும் சிறையில் சமையலறையுடன் இன்னுமொரு அறையும் விருந்தையும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## நீக்ரோக்களின் போராட்டத்திற்கு

# அமெரிக்கா ஆதரவு

### கார்ட்டர் அறிவிப்பு

லண்டன், ஏப். 2

"இனவாதம், வறுமை ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் ஆபிரிக்க கறுப்பு இன மக்களின் போரா டங்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கத் தயாராக இருக்கிறது" என்று அமெரிக்க ஜனாதிபதி திரு ஜிம்மி கார்ட்டர் அறிவித்துள்ளார்.

தற்போது ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள திரு கார்ட்டர் தமது இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்வது இதுவே முதல்தடவையாகும்.

நமீபிய, ரொடீஷிய விவகாரங்கள் குறித்து திரு கார்ட்டர் கருத்து வெளியிடுகையில் "சுதந்திரத் தேர்தல்கள் நடத்தப்பட்டு கறுப்பரான பெரும்பான்மையினரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்படுவதே நியாயம்" என்றார்.

நீதிவழங்கப்படாத பட்சத்தில் போராட்டங்கள் வெடிப்பது அதிகரித்துவிடும் என்றும் திரு கார்ட்டர் குறிப்பிட்டார். [உ]

## நெசவாளர் குடும்பங்களுக்கு உதவ எம்.ஜி.ஆர். கோரிக்கை

சென்னை, ஏப் 2

"தரத்தில் உயர்ந்த துணிகளைத் தயாரிப்பதில் கைத்தறி நெசவாளர் அக்கறை செலுத்தவேண்டும்" என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினர்.

சென்னையில் நடைபெற்ற கைத்தறி கூட்டுறவாளர் கண்காட்சியில் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கலந்துகொண்டு பேசுகையிலேயே இவ்வாறு சொன்னார்.

மக்களின் மனம் கவரும் வகையில் ஆடைகள் நவீன பாணியில் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறிய முதல்வர் நெசவுத் தொழிலையே நம்பியுள்ள பலலட்சக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களுக்கு மக்கள் உதவ வேண்டும் என்றார். (இ)

### 9 மூடை நெல், 10 மூடை உளுந்து

# 8 ஆயிரம் நகைகளையும் கொள்ளையடித்தனர்

### வவனியா விவசாயி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"எனது வீட்டுக்குள் வந்த இலர் சாமான்களை லொறியில் ஏற்றிச்சென்றனர் 9 மூடை நெல், 10 மூடை உளுந்து, 5 மூடை எள், ஆகியவற்றுடன் 8 ஆயிரம் ரூபா நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றனர்"

இவ்வாறு வவனி பிராமணகுளத்தைச் சேர்ந்த விவசாயி இராமநாதர் குமாரசாமி சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

செப்டம்பர் ஆரும் தேதி என் வீட்டிற்கு, ரி பி. ரீணன்டோ வந்தார். அங்கு அவருக்கு கமம் இருக்கிறது ஒரு ஜீப்பில் சப்இன்ஸ்பெக்டர் கான்ஸ்டபிளுடன் வந்தார். ஜீப் நம்பர் 31சிறி 211, பொலிஸ்காரர் நம்பர்கள் 13,266, 5204 மற்றவர்கள் நம்பர் தெரியாது. பொலிஸார் வந்ததும், நான் ஒழித்துவிட்டேன். காட்டுக்குள் போய்விட்டேன். அதன் பின் வீட்டுக்கு வந்தேன். மூன் கதவு திறந்திருந்தது இல சாமான்களைக் காணவில்லை. டிசல் கானைக் காணவில்லை. ஏ.ஜி.ஏ.யிடம் முறையிட்டு கிராமசேவகர் அந்த டீசல் கானை தருமலிங்கம் குமாரசாமியிடமிருந்து எடுத்தார்கள். நானும் மற்றொருவரும் நின்றோம். லொறியும் காரும் வந்து நின்றது துவக்குச்சூடு கேட்டது. நான் வீட்டிலிருந்து ஓடி பதுங்கியிருந்தேன். வீட்டிற்குள் பெர்ணுன்டோ டோர்ச் லைட்டுடன் வந்தார் மற்றவர்களும்போனார்கள்கார் லொறி லைட் எரிந்து கொண்டிருந்தது. பெர்ணுன்டோ கையில் துவக்கு இருந்தது பின் என் வீடுஎரிந்தது லொறியும், காரும், போய்விட்டது. என் வீட்டு சாமான்களை லொறியில் ஏற்றிச்சென்றனர் 9 மூடை நெல் 10 மூடை உளுந்து 5 மூடை எள்ளு, செத்தல் மிளகாய் மூடைகள், டிரக்டர் உதிரிப்பாகங்களை,ஏற்றிச் சென்றனர். 8ஆயிரம் ரூபா நகையும் கொண்டுபோனார்கள் 70,000ரூபா நஷ்டம். உதவிப் பொலிஸ் அதிபருக்கு புகார் செய்தேன்.

## 'குண்டருக்கு அஞ்சி காட்டில் இரவைகழித்தோம்'

### பெண் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி புனிதவதி பொன்னம்பலவாணர் கூறியதாவது:

"நான் ஆகஸ்ட் மாதம் இலுப்பைக்குளம் கமத்தொழில் ஆராய்ச்சியாளராகக் கடமையாற்றினேன். என் கணவர் டுபாய் போய்விட்டார். நான் 2 குழந்தைகளுடனும், பெற்ருேருடனும் அங்கிருந்தேன். ஆகஸ்ட் 17ந் தேதி வீட்டில் இருக்கும் போது சிலர் வந்தனர். நாட்டில் கலவரம் நடப்பதாகவும் 6 மணிக்கு முன் சென்றுவிடுவது நல்லதென்றும் அல்லது தாக்குவோம் என்றனர். நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது. பாதுகாப்புக்கு இடம் தேடிக்கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் வந்து குண்டர்கள் வருவதாகவும். அடுத்த வீட்டில் போய் ஒளிக்கும்படி கூறினர். நாங்கள் அடுத்த வீட்டிற்குப் போனோம் நாங்கள் அடுத்த சிங்கள் வீட்டில் இருக்கும் போது குண்டர்கள் வந்து, என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். பின் சிங்கள வீட்டில் தமிழர்களைத் தேடினர்கள். நாங்கள் காட்டுக்குள் சென்றுவிட்டோம். இரவு காட்டில் இருந்தோம். காலையில் இராணுவம் வந்தது. அதில் கச்சேரிக்குப் போனோம். கச்சேரியிலிருந்து வவனியாவுக்கு பஸ்ஸில் சென்றோம். டாக்டர் வினராசா இராணுவத் தொண்டர் சேவையில் இருக்கிறர் அவர்தான் இராணுவ ஜீப்பைக் கொண்டுவந்து எங்களைக் கூட்டிச் சென்றார்."

# டி. ஐ. ஜி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்: பண்டாராவை அனுராதபுரம் கொண்டுபோனன்று அனுராதபுரம் எஸ். பி. லியனகே இங்கிருந்தார்? ஆம்.

சட்: இங்கிருந்து போய், வளாக மாணவர்கள் ஆணியால் அடிக்கப்பட்டதாகவும், பொலிசார் தாக்கப்பட்டதாகவும் வதந்தி பரப்பினர்? (பதில் இல்லை)

சட்: உமது திறமையான சேவைக்கு பரிசு கிடைத்துள்ளது, எத்தனை வயது? 55.

சட்: தொடர்ந்து இருக்க இப்படிச் செய்தீர்? இல்லை

சட்: இ. போ. ச. பஸ் எரிக்கப்பட்டதாகவும், நாகவிகாரை எரிக்கப்பட்டதாகவும், ரயில் நிலையம் தாக்கப்பட்டிருப்பதாகவும் அனுப்பப்பட்ட தகவல் பாரதூரமானது? ஆம்

சட்: இந்த தகவல் பொய், நாகவிகாரை தாக்கப்படவில்லையென, அரசு வானெலி மூலம் அறிவித்தது? ஆம்

சட்: பிக்கு கொல்லப்படவில்லை என்று வானொலியில் சொல்லப்பட்டது? ஆம்

சட்: நாகவிகாரை தாக்கப்பட்டதென்ற பொய்த் தகவலால் 100 க்கு மேற்பட்ட இந்துக் கோவில்கள் தாக்கப்பட்டன? ஆம்

சட்: அப்பாவி மக்கள் தாக்கப்பட்டுவருவதற்குக் காரணமாயிருந்த இத்தகவல் அனுப்பியதையிட்டு வெட்கப்பட வேண்டும்; அப்படியானவர்கள் யூனிபோம் அணிந்திருப்பது அவமானமாகும், வெட்கப்படவேண்டும்.

சட்: யாழ்ப்பாண மக்கள் பஸ் நிலையக் கடைகளை எரித்ததாகச் சொன்னீர்? நான் அப்படிச் சொல்லமாட்டேன்.

சட்: பண்டாராவை ஆஸ்பத்திரியில் கூட்டிவரச் செல்ல என்று இருந்ததா? இல்லை

சட்: புத்தகத்தைப் பார்த்தீர்? ஆம்

சட்: யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில், 16 ம் தேதிக்குமுன் வெளியில் போகும்போதும், வரும்போதும் 'என்ரி' போடப்படுவதுண்டு? ஆம்

சட்: பண்டாராவை, 'என்ரி' போடாமல் போய் கூட்டி வந்தீர்? ஆம்

சட்: 'என்ரி' போடாமல் செல்வதையே விரும்பினீர்? (பதில் இல்லை)

சட். பண்டாரா அன்றிரவு அனுராதபுரம் அனுப்பப்பட்டார்? ஆம்

சட்: அப்போ அனுராதபுரம் எஸ். பி. இங்கிருந்தார்? ஆம்

சட்: அனுராதபுரம் எஸ் பி. வந்தது தெரியும்? ஆம்

சட்: டி. ஐ. ஜியும் வந்தார்? தெரியாது.

சட்: யாழ். ஆஸ்பத்திரி ஓவசியர் திலகர் சம்பந்தமாக கேட்க விரும்புகிறேன்; 16 ம் என்ரி போடாமல் வெளியில் போனீர்? ஆம்

சட்: பல தடவை போனீர்? ஆம்

சட்: திலகர் வீட்டிற்குப் போனதை மறுத்தீர்? ஆம்

சட்: ஆஸ்பத்திரியில், எஸ்பியுடன் திலகர் கதைத்தார்? சம்பவத்திற்கு முன்பு

சட்: திலகர் என்ன கேட்டார்? என்னை கேட்கவில்லை

சட்: எஸ். பி. என்ன கேட்டார்? றைபிள் எங்கே என்றார். நான் பொலிஸ் நிலையத்தில் இருப்பதாகச் சொன்னேன்.

சட்: திலகர் பிள்ளைகளை உமக்குத் தெரியும் என்றீர்? ஆம்

சட்: குடும்பத்தை தெரியும்? ஆம்

சட்: வீட்டிற்குப் போவீரா? இல்லை

சட்: பிள்ளைகளைத் தெரியுமா? ஆம்.

சட்: எங்கே அவர்களைக் கண்டீர்? அவர்கள் வீட்டில் (சிரிப்பு)

சட்: வீட்டை போகவில்லை என்றீரே? வீட்டை கடந்து செல்லும்போது கண்டேன்.

சட்: திலகர் வீட்டை ரோட்டிலிருந்து பார்க்க முடியாது, வேலியிருக்கிறது. எப்படி பிள்ளைகளை போகும்போது பார்த்தீர்? உள்ளே பார்க்கவில்லை? அவர்கள் வெளியில் நிற்கும்போது பார்த்தேன்.

சட்: மகன் ராஜாவை தெரியும்? ஆம்

சட்: பெயர் தெரியுமா? ஆம்

சட்: எப்படி தெரியும்? எனக்குத் தெரியும்.

சட்: யாழ்ப்பாணத்தில் எல்லாருடைய பிள்ளைகளின் பெயரும் தெரியும்? எல்லாப் பிள்ளைகளின் பெயரும் தெரியாது.

சட்: நீர் றைபிள் எடுக்கச் சென்றபடியால் திலகர் ஆஸ்பத்திரியில் கேட்டார்? எஸ். பியைக் கேட்டார்.

சட்: றைபிள் எடுக்கும் போது நீர் நின்றதாக அவர்கள் கூறினர்கள்? ஆம்

சட்: திலகரும் பிள்ளைகளும் உம்மை வேண்டுமென்று இதில் இழுத்தார்கள்? ஆம்

சட்: அதற்குக் காரணம் உமக்குத் தெரியாது? தெரியாது

சட். பாலா! திலகரின் பிள்ளைகள் சாட்சியமளிக்கையில், உமக்கு எதிராக சொல்லவில்லை? இல்லை

சட்: பொலிசார் தாக்கிய போது நீர் தடுத்ததாக அவர்கள் சொன்னர்கள்? ஆம்

சட்: உம்மை இதற்குள் இழுத்துள்ளார்கள் என்று யாரும் சொன்னால் பொய்? ஆம்

சட்: அப்படி நீர் சொல்லியிருந்தாலும் பொய்? ஆம்

இம்மாதம் 5 ம் தேதி இன்ஸ்பெக்டர் குருசாமி சட்டத்தரணி கதிர்காமர், சட்டத்தரணி கண்டலூட் மணிவாசகரினல் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுவார்.

— ... (க)

## கமிஷன் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வவனியா பொலிஸ் நிலையத்திலிருக்கும், ஆகஸ்ட் கலவரம் பற்றிய புகார்கள் தொடர்பான சில பதிவு புத்தகங்களை, கமிஷன்முன்சமர்ப்பிக்குமாறு, சன்சோனி கமிஷன் தலைவர் திரு எம். சி. சன்சோனி நேற்று உத்தரவிட்டார்.

கமிஷன்முன் ஆஜரான சப் இன்ஸ்பெக்டர் பந்துலகுமாரவிடம், அப்புதிய புத்தகங்களை, தவருமல் 3 ம் தேதி சமர்ப்பிக்கும்படி கமிஷனர் தெரிவித்தார்.

## ஏப். 24-ல் அனுராதபுரத்தில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

சன்சோனிக் கமிஷன் விசாரணை இம்மாதம் 11-ம் திகதியுடன் யாழ்ப்பாணத்தில் முடிவடையும். இம்மாதம் 24ம் திகதி விசாரணை அனுராதபுரத்தில் ஆரம்பமாகும்.

இன்று முல்லைத்தீவு சம்பவங்கள் தொடர்பான விசாரணை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும்

இம்மாதம் 7ம் திகதி வவனியா இன்ஸ்பெக்டர் கந்தசாமி சாட்சியமளிப்பார். அன்று வவனியா எஸ். ஐ. நாதன், சட்டத்தரணி விக்கிரமசிங்காவால் குறுக்குவிசாரணை செய்யப்படுவார்

இவ்வாரம், இன்ஸ்பெக்டர் குருசாமி, சட்டத்தரணி கதிர்காமரால் குறுக்கு விசாரணை செய்யப்பட விருக்கிறார். [க-இ]

**Rio** (Jaffna) (phone:7607)
Daily 4 Shows
GOLDEN NEEDLES

**வெல்லி** (காங்கேசன்துறை?)
தினசரி: 6-30, 9-30
சிவாஜி—ஜெயலலிதா
தெய்வமகன்

**நாகம்ஸ்** (கன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர். —விஜயா
நடித்த
விவசாயி

4-வது வாரம்
**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45.
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் -ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

யாழ். நகரில் இப்பொழுது 5-வது வாரமாக
வெற்றி நடைபோடுகிறது!
**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642:
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர், ஜெயசித்ரா, அசோகன், தங்கவேலு
பணக்கார பெண்
குடும்பத்துடன் சென்று பாருங்கள்.

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி. வைஜந்திமாலா
நடித்த
பார்த்திபன் கனவு

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார். நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m.
DEAN JONES
in
MR. INVISIBLE
(Scope Color Action)

காட்சிக்கு காட்சி ஹவுஸ்புல்
இதன் மர்மம் என்ன?
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
4காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா
நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
நடித்த
வாடைக்காற்று

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

**லிடோ** (யாழ். நகர்)
போன் 7698
முத்துராமன், சிவகுமார். சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

### "அனுராதபுரத்தில் எமக்கு அடித்த

# சிங்களவருக்கு யாழ். கச்சேரியில் உதவிப்பணம்; எமக்கில்லை

## எனது சகோதரரும் தொழிலாளியும் கொல்லப்பட்டனர்:

### சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தைச் சேர்ந்த செல்வநாயகம் தயாபரன் என்பவர் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"கலவரத்தின்போது அனுராதபுரத்தில் மின்சாரப்பகுதியில் 6 லட்ச ரூபா கொந்தராத்து வலையை மேற்பார்வை செய்துகொண்டிருந்தேன். என் சகோதரர் பாலசுந்தரம் தான் இந்தக் கொந்தராத்தை எடுத்திருந்தார்.

"என்னுடன் வேலைசெய்த சகோதரர் ஸ்ரீகாந்தன், கலவரத்தில் கொள்ளையர்களால் அடித்துக் கொல்லப்பட்டார் மற்றொரு தொழிலாளி ஆறுமுகம் இதுவரை திரும்பவில்லை. அவரும் கொல்லப்பட்டார்.

அனுராதபுரம் புதிய பஸ் நிலையத்திற்குப் பக்கத்தில் கொந்தராத்துவேலை செய்தோம். அப்போது சிலர் வந்து, யாழ்ப்பாணத்தில் பௌத்த பிக்குவும் பொலிசும் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டதாகவும் ஆதலால் தமிழர் இங்கு வேலைசெய்யமுடியாது என்றும் சொன்னார்கள்.

"அங்கு அப்போது 18 தமிழரும் 2 சிங்களவரும் வேலை செய்துகொண்டிருந்தார்கள். நாங்கள் சிங்களவருக்கு ஒருவித தீங்கும் செய்யவில்லை. எங்களை அடிக்கவேண்டாம் என்று அவர்களிடம் சொன்னோம். அவர்கள் போய்விட்டார்கள். சிறிதுநேரத்தில் 50 பேர் வந்து எங்களை அடித்தார்கள். காடுகளுக்குள் நாம் ஓடினோம். என் சகோதரனைப் பிடித்து நல்லாய் அடித்தார்கள். பின்பு நாம் கச்சேரிக்குப் போனோம். சிமெந்து, இரும்புக் கம்பிகள் எல்லாவற்றையும் எடுத்துவிட்டார்கள். எங்களுக்கு 71,000 ரூபா நஷ்டம். காட்டுக்குள் சென்ற தொழிலாளர்களில் ஒருவர் இன்று வரை திரும்பவில்லை. அவர் கொல்லப்பட்டுவிட்டார். காயமடைந்த சகோதரன் ஸ்ரீகாந்தன் பின்மரணமானார்.

சமூகசேவைப்பகுதி 850 ரூபா நிவாரணம் கொடுப்பதாக அறிந்தேன். அதற்கு விண்ணப்பித்தோம். யாழ்ப்பாணம் கச்சேரிக்குச் சென்றேன். எனக்குக் காசுகிடைக்கவில்லை. ஆனால் அனுராதபுரத்தில் எங்களைத் தாக்கிய சிங்களவர்களுக்கு உதவிப் பணம் கொடுத்துக்கொண்டிருந்தார்கள், அங்கு நின்ற தமிழர்களிடம் 'இவர்கள்தான் எங்களை அடித்தவர்கள். இவர்களுக்கு உதவிப்பணம் கொடுக்கிறீர்கள் என்றேன். காசு கொடுத்துக்கொண்டிருந்த சமூகசேவை இலாகா உத்தியோகத்தர்களுக்கும் இவர்கள்தான் எங்களை அடித்த சிங்களவர்கள் என்று கூறினேன். அவர்கள் அக்கறை எடுக்கவில்லை. அவ்விடத்தில் பதட்டநிலை ஏற்பட்டது. எங்களுக்கு காசுதர கச்சேரி ஊழியர்கள் மறுத்துவிட்டார்கள், சிங்களவருக்குக் காசு கொடுத்தார்கள்.

அரசாங்க அதிபர் வந்து அனுராதபுரம்போய் என்ன நடந்தது என்று கேட்டுவரச் சொன்னார், நாங்கள் பின் அனுராதபுரம் கச்சேரிக்கும் போய் விண்ணப்பித்தோம். காசு கிடைக்கவில்லை. [ச-அ]

## "கொள்ளையடித்தபின் வீட்டைக் கொளுத்தினர்"

(யாழ்ப்பாணம்)

வவுனியாவைச் சேர்ந்த குமாரசாமி மயில்வாகனம் அரியரத்தினம் கூறியதாவது:

என்வீடு வவுனியா நகரசபை வீடமைப்புத் திட்டத்தில் இருக்கிறது. ஆகஸ்ட் 19ம் தேதி சிங்களவர் வவுனியா நகரத்தைத் தாக்கப்போவதாகத் தகவல் கிடைத்தது, 21ம் திகதி வவுனியா பஸார் எரிந்துகொண்டிருப்பதை என் வீட்டிலிருந்து பார்த்தேன். இதனால் சில தமிழ்க்குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறின, 22ம் தேதி நான் வவுனியா பஸாருக்கு சேதங்களைப் பார்க்கப் போனேன். அப்போது 4 பேர் ஒழுங்கையால் என் வீட்டுப்பக்கம் போனார்கள். நான் அவர்களை விலத்திவிட்டு சென்றேன். என் மனைவி பிள்ளைகளை எடுக்கக்கூடிய சாமான்களை எடுத்துக்கொண்டு புறப்படும்படி சொன்னேன், கதவு யன்னல்களைப் பூட்டிவிட்டு கேற்றைப் பூட்டும்போது அதே ஆட்கள் 50 யார் தூரத்தில் வந்துகொண்டிருந்தார்கள், நான் ஓடிப்போய் மனைவி பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஓமந்தைக்குச் சென்றேன், அன்று ஊரடங்குச் சட்டம், அதனால் திரும்பிவரவில்லை, மறுநாள் என்வீடு கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டதாக அறிந்தேன், பொலிஸில் புகார் செய்யவில்லை.

அடையாளம் காட்டச் சென்ற ஒருவரையும் ஒரு பெடியனையும் பொலிஸார் அடித்து திருப்பி அனுப்பினார்கள், அவர்கள் வந்து சொன்னார்கள் அதனால் நான் போகவில்லை. எம்.பியிடம் சொன்னேன். பின் 22ம் தேதி இணைப்பு அதிகாரியிடம் சொன்னேன், என் சாமான்கள் ஒரு புதிய கொட்டிலில் இருப்பதாகவும் நூல்கள் இரு கடைகளில் இருப்பதாகவும் அறிந்தேன். பொலிஸில் அதுபற்றிப் புகார் செய்தேன், பொலிஸார் அவற்றை கைப்பற்றினர், நான் அடையாளம் காட்டினேன், 2 சந்தேக நபர்களையும் காட்டினேன், 5 பேரைப் பிடித்து 14 நாட்கள் ரிமாண்டில் வைத்து பின் விடுதலை செய்ததாக அறிந்தேன், சாமான்கள் நீதிமன்றத்தில் இருக்கிறது. எனக்கு 35 000 ரூபா நஷ்டம்

## 'என் புகாரை பொலிசார் அலட்சியம் செய்தனர்"

### வவனியா வர்த்தகர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

வவனியா சின்னத்தம்பி நாகேஸ்வரன் (வர்த்தகர்) கூறியதாவது: தம்பிப்பிள்ளை ஸ்ரோர்ஸ் என் தகப்பனாருடையது. ஆகஸ்ட் 20ல் வவுனியாவில் ஊரடங்குச்சட்டம் கடையைப் பூட்டிவிட்டு தம்பிப்பிள்ளை கடையில் தங்கினேன். சத்தம் கேட்டு எழும்பினேன். துவக்கு வெடிச்சத்தம் கேட்டது. வெளியில் வரவில்லை ஒட்டை இளப்பி பார்த்தேன். தேன்சுரபி ஹோட்டலின் முன்னால் சில பொலிசார் நின்றனர். சத்தம் கேட்டது. இச்பால் ஹோட்டலும் எரிந்துகொண்டிருந்தது. துரைசிங்கம் கடையும் எரிந்தது. பொலிசாரை தெரியாது அடையாளம் காட்டுவேன். மக்கள் றோட்டில் நடமாடவில்லை. மறுநாள் பொலிசார் உடைத்ததாக அறிந்தேன். பாண் வாங்கப் போனேன். ஊழியர்கள் சொன்னார்கள் பின் பொலிஸ் உத்தியோகத்தர் முறைப்பாடு பதிந்தார். நானும் போனேன். முறைப்பாடு கொடுக்கவில்லை. அப்போது வெளியில் 4பொலிசார் கதைத்துக்கொண்டிருந்தனர். இவர்களுக்கு பாடம் காணாது இன்னும் படிப்பிக்கவேணும் என்று கூறினார்கள். வேறு ஆட்கள் பாதுகாப்பு தரும்படி கேட்டார்கள். பொலிசார் கவனிப்பதாக கூறிச்சென்றனர். 21ம் திகதி முறைப்பாடு பதிந்தனர், 21ம் தேதி இரவு பூட்டு உடைத்து சத்தம் கேட்டது ஐடியல் கிறீம் ஹவுஸ், சண்முகம் ஜவுளிக் கடை மற்றும் இரு கடைகளும் உடைக்கப்பட்டது, என் தகப்பனார் கடையில் டெலிபோன் இருந்தது. பொலிசுக்கு போன்பண்ணினேன் அலட்சியம்செய்தனர். அக்கறை காட்டவில்லை சிலரை அடை

(8ம் பக்கம் பார்க்க)

## 'பொலிஸுக்கும் தமிழர்க்கும் போர் என்றனர்'

### மிகிந்தலை ஊழியர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

வவுனியாவைச் சேர்ந்த இரத்தினசபாபதி நாகரத்தினம் கூறியதாவது: நான் மிகுந்தலை, மடுகந்தலாவ நீர்ப்பாசன இலாகாவில் கடமையாற்றினேன். ஆகஸ்ட் 18-ம் தேதி காலை கடைக்குச் சென்றேன், யாழ்ப்பாணத்தில் பொலிஸ் கொல்லப்பட்டதாகவும், தமிழருக்கும் பொலிஸாருக்கும் போர் நடப்பதாகவும் அங்கு நின்றவர்கள் கூறினார்கள். அனுராதபுரத்து பஸ்ஸில் வந்தவர்கள் அங்கு கலவரம் நடப்பதாகவும் சொன்னார்கள். கடைக்காரர் என்னைப் போகும்படி ஆலோசனை கூறினார். என்வீடு சேதமடைந்தது.

## இன்று வகுப்புக்களை பகிஷ்கரிப்பர்

[கொழும்பு]

இலங்கைப்பல்கலைக்கழக கட்டுப்பத்தை வளாக மாணவர்கள் இன்று தமது வகுப்புக்களைப்பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளனர்.

கொழும்பு வளாக மாணவர்களின் கோரிக்கைக்கு ஆதரவாகவே இவர்கள் தமது வகுப்புக்களை இன்று பகிஷ்கரிக்கின்றனர்.

இதே வேளையில் பல்கலைக்கழக விவகாரம் குறித்து பேச்சு நடத்துவதற்காக சர்வ வளாக மாணவமன்றப்பிரதிநிதிகள் இம்மாதம் 6-ம் திகதி உயர்கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்திக்கிறார்கள்.

(ம-இ)

"மனித சுதந்திரத்துக்கு

# முட்டுக்கட்டையாகவுள்ள சட்டங்களைத் திருத்தியுள்ளோம்"

—பிரதமர் 'பிரேமா'

(வெள்ளவத்தை)

"ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அந்நாட்டு மக்களின் கரங்களில்தான் தங்கியுள்ளது. தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற இனப்பாகுபாடோ மொழிப் பாகுபாடோ; ஏழை பணக்காரன் என்ற அந்தஸ்தோ காட்டப்பட மாட்டாது" என்று பிரதமர் ஆர். பிரேமதாசாவுக்கும் அவர் பாரியாருக்கும் சோனக இஸ்லாமிய கலாசாரநிலையம் அளித்தவரவேற்பு வைபவத்தின்போது பிரதமர் பேசுகையில் கூறினார்

பிரதமரையும் அவரது பாரியாரையும் முஸ்லிம் கல்லூரி மாணவிகள் வாழ்த்துப்பா இசைத்து வரவேற்றனர். சோனக இஸ்லாமியகலாச்சாரத் தலைவர் அல்ஹாஜ் சேர் ராஸிக் பரீத் வரவேற்புக்குத் தலைமை தாங்கினார். பிரதமர் திரு ஆர் பிரேமதாசா தொடர்ந்து மேலும் பேசுகையில்,

"நமது நாடு ஒழுக்கப் பிரச்சனையைக் கொண்டுள்ளதால் ஒழுக்கம் நிறைந்த நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பாரிய பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். மக்களை மதிக்கும் மக்கள் நலன் பேணும் மனித இதயங்களைக்கொண்டு கட்டியெழுப்பப்படும் ஒரு நிலையம் இதுவென என்மனம் கூறுகிறது. இதற்காக நாம், மனிதனைப் பாதிக்கும் மனிதசுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் சகல சட்டங்களையும் திருத்தியுள்ளோம். ஒவ்வொரு மனிதனும், மனிதனை நேசிக்க வேண்டும். அவனுக்கு உதவ முன்வரவேண்டும். மதங்கள் போதிக்கின்றது மனிதன் உயர்ந்தவன் என்ற கருத்தை" என்று குறிப்பிட்டார்

பிரதமருக்கு தங்கப்பதக்கம் ஒன்று அணிவிக்கப்பட்டது. திரு குர் ஆன் சிங்களமொழி பெயர்ப்பும்அவருக்கு வழங்கப் பட்டது.

# சுயமுயற்சியில் செயல்படுவோம்'

(சுழிபுரம்)

"நாடு உனக்கு என்ன செய்தது என்று கேளாமல், நாட்டுக்கு நீ என்ன செய்தாய்" என்ற கோட்பாட்டில் நாம் இயங்கவேண்டும். மாணவர்களின் நலனைப் பேணுவதற்கு பெற்றோரும் ஆசிரியர்களும் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டும். அரசின் தயவை நாம் எல்லாவற்றுக்கும் நாடாமல், எதிர்பார்க்காமல் எங்கள் சுயமுயற்சியில் செயல்பட்டு வெற்றி காணவேண்டும்."

இவ்வாறு தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியசாலை பெற்றோர் தின விழாவிற்கு தலைமை வகித்து பேசிய வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா குறிப்பிட்டார்.

வித்தியசாலை அதிபர் எஸ். இராசையா பாடசாலைகளின் தேவைகள் குறைகள் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்தார். திரு அ. தியாகராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு.தா. திருநாவுக்கரசு பேசுகையில்,

'எனது தொகுதியிலுள்ள பாடசாலைக்கு பெரும் தொகையான ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர். எனது

(5-ம் பக்கத்தொடர்ச்)

## என் புகாரை...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யாளம் தெரியும். பெயர் தெரியாது. வவனியா பொலிசுக்கு புகார் செய்தேன். சாமான்களை கொள்ளையடித்து சிங்கள பிரிவு ப நோ கூ சங்க லொறியில் சாமான்களை ஏற்றிச் சென்றனர்.

வவனியாவில் அந்த பொலிசார் ஒருவர் சேவையில் இருக்கிறார். பெயர்கள் வடிவாகத் தெரியாது.

## காட்டிக்கொடுத்த குரல்!

[உடுப்பிட்டி]

முகமூடியணிந்து சிக்காக்கோ பாணியில் தேவாலயத்தில புகுந்து திருடிய ஒருவரை அவரது குரல் காட்டிக் கொடுத்தது!

பருத்தித்துறைமுனை என்னுமிடத்திலுள்ள புனித தொம்மையப்பர் தேவாலயத்தில் நள்ளிரவில் புகுந்து கொண்ட திருடன் கொள்ளையடித்துக் கொண்டிருக்கையில், அரவம் கேட்டு விழித்தெழுந்த பங்குக்குரவர் தேவாலய அறையில் சென்றுபார்த்தாராம். அப்போது திருடன் கத்தியைக்காட்டி, குருவானவரை மிரட்டவே குருவானவர் "ஐயோ, கள்ளன், கள்ள" என்று குளறத் தொடங்கிவிட்டார்.

குருவானவரின் குளறல் சத்தம் கேட்டு விரைந்த அயல் மக்கள், திருடனைத் துரத்தவே அவன் இருளில்ஓடி மறைந்துவிட்டான். பெறுமதியான பல பொருட்களைத் திருடன் அபகரித்துச் சென்றிருந்தான்.

இத்திருட்டுச் சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிஸில் புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதி உதவிப்பொலிஸ் அதிபர் ஸ்தலத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் அடையாள அணிவகுப்பு ஒன்று நடாத்தப்பட்டதைத் தொடர்ந்து திருடனை அவனது குரலைக்கொண்டு குருவானவர் அடையாளம் காட்டினார்!

திருடனிடமிருந்து திருட்டுப்போன விலையுயர்ந்த பொருட்கள் மீட்கப்பட்டன. பிரஸ்தாப நபர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

## தாய்லாந்தில் கடும் சண்டை

பாங்ஹாக், மார்ச் 2 தாய்லாந்து கிழக்கு எல்லையிலுள்ள ஒரு மாவட்டத்தில், தாய்லாந்து அரசுப் படையினருக்கும், கம்யூனிஸ்ட் படையினருக்குமிடையே இன்று சண்டை மூண்டது.

கடுமையான இம்மோதல், இன்றிரவு வரை நீடித்ததாகவும், உயிர்ச்சேதமும் அதிகம் என்றும்ஏஜென்ஸிசெய்திகள் தெரிவித்தன.

அரசுப் படையினருக்கு ஆதரவாகப் போர் விமானங்கள் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இளம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கும்' என்று கேட்டுக் கொண்டார்.

'நான் இந்த நூலை வாசித்தபோது, யாழ்ப்பாணத்திலும் ஆங்கில அறிவுடைய சிறந்த நூலாசிரியர்கள் உண்டென்பதை உணர்ந்தேன். அந்தவகையில் நூலாசிரியரின் பணி பாராட்டப்பட வேண்டும்' என்றும் அவர் கூறினார்.

முன்னைநாள் கல்விப்பணிப்பாளர் திருமதி இரத்தினநவரெத்தினம் பேசுகையில், 'சேர் பொன்னம்பலம் இராமநாதன் இந்த நாட்டு மக்களுக்கு ஆற்றிய சேவைகள் அளவிட முடியாது. அன்னாருக்கு நாம் செய்யும் கடனாக அன்னாரது வாழ்க்கை வரலாற்று நூலை, என்னவிலையானாலும் ஆளுக்கு ஐந்து நூல்கள் வாங்கி மற்றைய நண்பர்களும் படித்துப் பயன்பெற கொடுத்துதவ வேண்டும். இந்தவகையில் நானும் 5 நூல்களை வாங்கி, சிங்கள நண்பர்களுக்கும் ஒரு நூலை கல்வித்திணைக்கள நூலகத்திற்கும் இன்று அனுப்பவுள்ளேன். அப்போதுதான் அன்னாரது சேவையை சகலரும் அறியமுடியும்" என்றார்.

விழாவில் நூலாசிரியர் திரு மு வைத்திலிங்கமும் உரையாற்றினார், கலைவிருந்தை இராமநாதன் இசைக்கல்லூரி மாணவிகள் அளித்தனர். [கெ].

## சந்தேகம்

(ஹொரனை)

வீதியில் முகத்தில் இரத்தக் காயத்துடன் இல்வா என்பவரது சடலம் இடக்கக் காணப் பட்டது. ஹொரணைப் பொலிசார் இது ஒருகொலை என்று சந்தேகிக்கிறார்கள். [உ]

## நமது

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

குமதிசெய்யப்படுகின்றன. நமது திரைப்படங்களில் நமது கலாச்சாரம் பண்பாடு பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்" என்றார்.

1977ம் ஆண்டின் சிறந்த கலைஞர்களுக்கு திருமதி ஆர் பிரேமதாசா பரிசில்களை வழங்கினார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# அரசன் கொம்பனி

(கொழும்பு-11, 72A, நாலாம் குறுக்குத் தெரு)

ஸ்தாபனத்தின் ஆதரவில்

# மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு

நீர்வேலி முற்றவெளி மைதானத்தில்

மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

ஏப்பிரல் 15-ந் திகதி சனிக்கிழமை (15-4-78)

பி. ப. 2 மணியளவில் ஆரம்பமாகும்

இரட்டை மாட்டு வண்டில் சவாரி

பிரிவுகள் A, B, C.

ஒற்றை மாட்டு வண்டில் சவாரி

கட்டுப்பணம் ரூபா 10/-

மத்தியஸ்தரின் தீர்ப்பே இறுதிமுடிவாகும் என்பதை அறியத்தருகின்றோம்

விபரங்களுக்கு:-

ச. விக்னேஸ்வரராசா (விக்கி), புன்னாலைக்கட்டுவன் தெற்கு



## மரண அறிவித்தல்

### திருமதி அருமைநாயகம் இராசரத்தினம்

காங்கேசன்துறை

திருமதி அருமைநாயகம் இராசரத்தினம் 2-4-78 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். இவர், மலாயன் பென்சனியரும், முன்னைநாள் காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவருமாகிய திரு. அ. இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியாரும், சிவானந்தசோதி, சிவஞானசோதி [இலங்கை வங்கி, கொழும்பு], இரத்தினசோதி [பொறியியல் கூட்டுத்தாபனம்], சந்திரமதி, டாக்டர் தவசோதி (U K), ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினவதி, பராசக்தி, கனகரத்தினம் [பிரதான பொறியியலாளர், திருக்கோணமலை], டாக்டர் செல்வநாயகி (U. K.) ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரது பூதவுடல், நாளை நான்காந் தேதி செவ்வாய்க் கிழமை காலை 9-00 மணியளவில், 'ராஜகம்', கல்லூரி வீதி, காங்கேசன்துறையிலிருந்து இறுதிக் கிரியைகளுக்காகக் காங்கேசன்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 8944


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registered as a Newspaper in Srilanka